இதழ் - 9

பிப்ரவரி - 2026

கேலக்ஸியின்

# விண்மீன்

மின்னிதழ்



## ‘பெண்கள் எழுதுவதே இங்கு சவால் தானே...’

– சம்சுல் ஹுதா பானு

## நிஸ்வாவின் நிழலில் பச்சைமலை!!!



ISBN 978-81-994858-0-8

9 788199 485808

www.galaxybs.com

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

விண்மீன்
மின்னிதழ்

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல
தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே
நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து.
- நாலடியார்

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
- ஔவையார்

**பதிப்பாளர்**
பாலாஜி பாஸ்கரன்

**ஆசிரியர்**
பரிவை சே குமார்

**இணை ஆசிரியர்**
தேவதர்சினி நடராஜன்

**வடிவமைப்பு**
சென் பாலன்
ஹரிபிரசாத்

**Published by**
Galaxy Book Sellers & Publishers

**Print Partners**
Printech, UAE

**Travel Partner**
FJ Tours & Travels, UAE

**Galaxy Book sellers & Publishers**
www.galaxybs.com
+91 99944 34432

GALAXY BOOK SELLERS & PUBLISHERS

ISBN 978-81-994858-0-8
9 788199 485808

# மனிதர்கள்

நாம் பழகும் மனிதர்கள் பலவிதமாய்த்தான் இருப்பார்கள். இந்த நாட்டுக்கு வந்தது முதல் பலதரப்பட்ட மனிதர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. சமீபத்தில் கேலக்ஸியின் பாராட்டு விழாவில் அதீப் குழுமத் தலைவர் டாக்டர் அன்சாரி வாஹித் அவர்கள் பேசும் போது தன்னுடைய அலுவலகத்தில் பணிபுரியும் ஆபீஸ் பாயை அப்படி அழைக்க விரும்புவதில்லை என்றும் அலுவலக உதவியாளர் என்றுதான் அழைப்பேன் என்று சொன்னார். உண்மையிலேயே பாராட்டக்கூடிய விசயம் இது. நம்மில் பலர் அப்படியெல்லாம் பார்ப்பதுமில்லை, யோசிப்பதுமில்லை.

இங்கே நாம் தங்கும் அறைகளில் பலதரப்பட்ட வேலைகளில் இருக்கும் நண்பர்களுடன்தான் தங்க வேண்டியிருக்கும். என்னைப் பொறுத்தவரை அறைக்கு வந்து விட்டால் எல்லாரும் ஒன்றுதான். அங்கே நம்ம ஊர் சாதீயப் படிநிலை போலெல்லாம் வேலையை மனதில் வைத்துப் பிரித்துப் பார்ப்பதில்லை. இங்கு வந்தது முதல் என்னுடன் நெருங்கிப் பழகிய நண்பர் சாதாரணப் பணியில் இருந்தார். அறையில் பேசிக் கொண்டிருப்பது, வெளியில் செல்வது எல்லாமே அவருடன்தான். என்னுடன் இருந்த ஒரு இஞ்சினியர் ரொம்பவே தராதரம் பார்ப்பார். 'நீங்க என்ன அவருடன் நெருக்கமா இருக்கீங்க... வெளியில போகும் போதெல்லாம் அவரோட போறீங்க'ன்னு சொல்வார். 'எனக்குப் பிடிச்சிருக்கு நான் அவரோட நட்பா இருக்கேன். அதுபோக என்னோட அவர் ஒத்துப் போறார், இதிலென்ன இருக்கு' என்பது ஆரம்ப நாட்களில் என்னிடமிருந்து வரும் பதிலாக இருந்தது. அதையே அவர் தொடரும் போது, 'இங்க எல்லார்க்கிட்டயும் வாடகை ஒரு மாதிரித்தானே வாங்குறீங்க, இல்லை அவருக்கிட்ட குறைச்சலா வாங்குறீங்களா..? அப்படிப் பாக்குறதா இருந்தா உங்களை மாதிரி இஞ்சினியர்களை மட்டுமே அறை நண்பர்களாக ஆக்கியிருக்க வேண்டும்' என்று சற்று சூடாகவே சொல்ல ஆரம்பித்ததும்தான் அவர் பேசாமல் இருந்தார்.

இங்கே அன்சாரி அவர்கள் தனது பணியாளர்கள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்துப் பேசியதைப் பார்த்த போது அதனால்தான் அவர் இன்னும் உயரங்களை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறார் எனத் தோன்றியது. சமீபத்தில் சாதி பற்றிக் கேட்டார் என்ற பதிவு ஒன்று சமூக வலைத்தளங்களில் சுழன்றடித்தது. ஆளாளுக்கு அடித்து ஆடினார்கள். இந்த சமூக வலைத்தளங்கள் ஒரு கேடு. என்ன ஏது என்ற ஆராய்ச்சியெல்லாம் யாரும் செய்வதில்லை, வடிவது அடுத்தவனின் ரத்தம் என்றால் நாமும் அதை இன்னும் கொஞ்சம் அதிகமாக்குவோம் என்ற மனநிலைதான் நம் எல்லோருக்கும். என்ன சாதி எனக் கேட்ட இடத்தில் என் சாதி தெரிந்து என்ன செய்யப் போகிறார் என்ற எதிர் கேள்வியை அழுத்தமாய் வைத்திருந்தால் போதும், பிறகு எப்படி நம்மிடம் மீண்டும் சாதியைக் கேட்க நினைப்பார்கள்..? படித்தோம், பட்டம் பெற்றோம், உயர் பதவியில் இருக்கிறோம் என்றெல்லாம் சொல்லும் போது உடைந்து அழுதோம் என்று ஏன் சொல்ல வேண்டும். அந்தக் கேள்வியை விட உடைந்து அழுவதுதான் கேவலம். கேள்வி கேட்டவரை உடைத்திருந்தால் நம் படிப்பிற்கு மட்டுமல்ல மண்ணிற்கும் பெருமைதானே.

பரிவை சே குமார்

# இதழில்....


**சிறுகதைகள்**

ஒரு மனிதனின் கவனக்குறைவு - முரா. இரக்ஷன் கிருத்திக்.

தடுமாறும் (தடம் மாறும்) இணைகள் - பாலமுருகன்.லோ

எம் காதல் ஜெயிக்கும் - பாத்திமா ஹம்தா

**நேர்காணல்**

'பெண்கள் எழுதுவதே இங்கு சவால் தானே...' எழுத்தாளர் சம்சுல் ஹுதா பானு

நேர்கண்டவர் : சித்ரா சிவன்

**கட்டுரை**

நிஸ்வாவின் நிழலில் (பகுதி–7) : பச்சைமலை!!! - இளங்கோ ராமசாமி

இல்லறம் - தமிழ்க்காதலன்

**புத்தகப் பார்வை**

விண்மீன் மின்னிதழ்

கறுப்பி - ராஜாராம்

**கேலக்ஸி நிகழ்வு**

'கணியன் பூங்குன்றனார் விருது' பாராட்டு விழா & புத்தக வெளியீட்டு விழா

**கவிதை**

ஏமாற்றம் - கோ.இளங்கோ

**சினிமா விமர்சனம்**

'சர்வம் மாயா' மற்றும் 'இத்திரி நேரம்' - பரிவை சே.குமார்.

# 'பெண்கள் எழுதுவதே இங்கு சவால் தானே...'

## – எழுத்தாளர் சம்சுல் ஹுதா பானு

**நேர்கண்டவர் : சித்ரா சிவன்**

"பெரிதினும் பெரிது கேள்" என்ற பாரதியின் புதிய ஆத்திச்சூடி வரிகளைப்போல் ஆறாம் வகுப்பு வரை மட்டுமே கல்வி பயின்ற திருமதி.சம்சுல் ஹுதா பானு தொழிலதிபர், கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர், சமூக ஆர்வலர் என சமூகத்தில் மாற்றத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய நபராக திகழ்ந்து வருகிறார். பல பத்திரிகைகளில் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகளை எழுதி வருகிறார். இஸ்லாமிய பெண்களின் கல்வி மேம்பாடு மற்றும் சமூக விழிப்புணர்வுக்காக தனது எழுத்துக்களின் மூலம் பங்காற்றி வருகிறார். கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளுக்காக புதுச்சேரி ஆளுநர் மற்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கைகளால் பரிசுகளைப் பெற்றுள்ளார்.

சாதனைப் பெண், தமிழ்கதிர், பொன்மகள், அன்புத்தமிழச்சி, தமிழணங்கு இயற்தமிழ் போன்ற விருதுகளை வென்ற ஹுதா அவர்கள், 'Hutha health care products' என்ற பெயரில் உணவுப்பொருள் தயாரிப்புக்கான சிறு தொழில் நிறுவனத்தை நடத்தி, விளிம்பு நிலையிலிருக்கும் பல பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வாழ்வாதாரத்தை அளித்து வருகிறார். இத்தகு சிறப்பு வாய்ந்த திருமிகு.சம்சுல் ஹுதா பானு அவர்களுடன் ஒரு மனம் திறந்த உரையாடல்...

**உங்கள் எழுத்து தொடங்கிய தருணம் எது? எழுத வேண்டுமென்பது நீண்டகால திட்டமா அல்லது எதிர்பாராமல் நிகழ்ந்த நிகழ்வா?**

நான் புத்தகங்கள் வாசிப்பதில் மிகுந்த ஆர்வமுள்ளவளாக இருந்தேன். வாசித்த புத்தகங்களின் கதைச்சூழல், கதாபாத்திரங்களை எனக்குள் ஒளிப்படமாக நிகழ்த்திப் பார்ப்பேன். வாசிக்கும் நூலின் முக்கியமான பகுதிகளை, சமூகத்தின் மீது தொடுக்கும் நியாயமான கேள்விகளை, மனபலத்துடன் இருக்க உதவும் வரிகளை, உத்வேகம் தரும் வார்த்தைகளை அடிக்கோடிடுவேன்.



ஆரம்பத்தில் இவ்வளவு தான் எனக்கும் புத்தகத்திற்குமான தொடர்பாக இருந்தது. என் மகள், மகன் பள்ளி செல்லும்போது பேச்சுப்போட்டி கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக அதன் தலைப்புகளுக்கேற்ப நான் தரவுகளைத் தேடி எழுதிக் கொடுப்பேன். பிள்ளைகளுக்கு பயிற்சி கொடுத்து அவர்களும் பரிசுகளை வென்றார்கள். இதையறிந்த உறவுகள், நட்புகள் அவர்கள் பிள்ளைகளுக்கும் எழுதித்தர சொன்னபோது செய்து கொடுத்தேன். அந்தப் பிள்ளைகளும் பரிசுகளைப் பெற்றபோதுதான் என்னால் எழுத முடியும் என்ற சிறிய பொறி என்னுள் ஏற்பட்டது. ஆனாலும் எனது கல்வித் தகுதி என்னை ஆமை ஓட்டுக்குள் புகுந்துகொள்வதைப்போல் புகுந்துகொள்ள வைத்துவிடும்.
இந்த சமயத்தில் நாளிதழ்கள், வாரஇதழ்களில் வரும் கவிதைகளை வாசித்து, நானும் அந்தத் தலைப்புகளில் கவிதைகள் எழுத முயற்சித்து எழுதி, யாருக்கும் அனுப்பாமல் நானே வைத்துக்கொள்வேன்.

நான் மறைந்திருந்த ஆமையின் ஓட்டை விட்டு கொஞ்சம் வெளியே வந்து ஜூனியர் விகடனில் ஒரு அரசியல் கவிதைப் போட்டிக்கு எழுதி அனுப்பினேன். என் கவிதை தேர்வாகி வெளிவந்து 500 ரூபாய் பரிசும் பெற்றது. எனக்கே நம்ப முடியாமல் திணறிப் போனேன். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக என்னை வெளிப்படுத்தி மீண்டும் ஓட்டுக்குள் ஒளிந்து கொள்வேன்.

பாண்டிச்சேரி பாரதி தமிழ்சங்கம் பாரதி கவிதைகளை முன்வைத்து உங்கள் சொந்த கற்பனையில் கவிதையெழுத வேண்டுமென்ற போட்டியை அறிவித்தது. உலகம் முழுவதுமிருந்து தமிழர்கள் கலந்துகொண்ட போட்டியது. அப்போட்டியில் பாரதியின் பாப்பா பாட்டை முன்வைத்து எனது கற்பனையில் ஒரு கவிதையை எழுதி அனுப்பினேன். அந்தக் கவிதையைத் தேர்ந்தெடுத்து பாரதி தமிழ்சங்கம் என்னைப் பாராட்டி கடிதம் அனுப்பியிருந்தார்கள்.

பாராட்டு கடிதத்தை கையில் வைத்துக்கொண்டு 'உன்னால் முடியும்' என எனக்கு நானே சொல்லிக்கொண்டு என்னை உத்வேகப்படுத்திய தருணம், என் எழுத்து தொடங்கிய தருணம்.

எழுத வேண்டுமென்ற எந்த திட்டமும் என்னிடம் இருக்கவில்லை. எதிர்பாராமல் நிகழ்ந்த நிகழ்வு தான். கல்வியில் கரைகண்ட அறிஞர்கள் சான்றோர்களால் மட்டுமே எழுத முடியும். அவர்களின் நூலை வாசித்து அறிந்து தெளிந்து கொண்டால் போதும் என்ற நம்பிக்கையில் இருந்தவள் நான்.

**உங்கள் முதல் படைப்பு வெளியானபோது உணர்ந்தது என்ன?**

எனக்கு எழுத்தில் கிடைத்த சின்ன சின்ன அங்கீகாரங்களை அறிந்த கணவரும் எனது குழந்தைகளும் எனக்காக ஒரு வலைப்பூ (blog) தொடங்கிக் கொடுத்து, கணினி இயக்க சொல்லிக் கொடுத்து எனது படைப்புகளை அதில் ஏற்றச் சொன்னார்கள். நானே என்மீது நம்பிக்கை இல்லாமல் இருந்த காலத்தில், இவளால் எழுத முடியும் என என் குடும்பம் நம்பிக்கை கொள்ள காரணமாக இருந்தது, அந்த 500 ரூபாய் பரிசுதான். எனது கணவர் அயல்நாட்டில் இருந்ததால் இங்கு குடும்பச்சுமை அனைத்தும் என் மீதே இருந்தது. அதனால் எழுதுவதற்கான நேரத்தை எடுத்துக்கொள்ள இயலவில்லை.

கணவர் அங்கு பணி ஓய்வு பெற்று ஊர் திரும்பியதும் எனக்கு எழுத்துக்காக ஒதுக்க சிறிது நேரம் கிடைத்தது. அந்த சமயத்தில் தான் எனது மகன் முகநூலில் கணக்கு தொடங்கி கொடுத்தார்.

சமூக வலைதளங்கள் பற்றி எதுவுமே தெரியாத எனக்கு கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல் இருந்தது. முதலில் பயத்துடன் சின்னச்சின்னப் பதிவுகள் செய்தேன். கொஞ்சம் கொஞ்சமாக முகநூலில் எழுதுவது பிடிபட ஆரம்பித்தது. கொஞ்சம் நேர்த்தியாக பதிவுகள் எழுத ஆரம்பித்தேன். கோதை பதிப்பக நிறுவனர் 'நான் ராஜாமகள்' அறிமுகம் கிடைத்தது. அவர், "உங்கள் எழுத்து ராமநாதபுர வட்டார வழக்கில் கிராமத்து நடையில் எல்லாரும் ரசிக்கும் வண்ணம் உள்ளது. எழுத்துப்பாணி சோ.தர்மன் அவர்களை நினைவூட்டுகிறது. நீங்கள் கட்டாயம் புத்தகம் எழுதுங்க. உங்களால் முடியும்." என்றார்.

புத்தகம் எழுதும் அளவுக்கு எனக்கு திறமை கிடையாது என நான் தயங்கியபோது, " முதலில் பத்து பக்கங்கள் உங்களுக்கு பிடித்த தலைப்பில் எழுதிப் பாருங்கள், அதை என்னிடம் வாசிக்க தாருங்கள்" என்றார்.

சரியென்று ஏதோவொரு நம்பிக்கையில் எழுத ஆரம்பித்தேன். எனக்குள் மூச்சுமுட்ட அடைந்து கிடந்த தாயை இழந்த சிறுமியின் வாழ்வை எழுதிப்பார்த்தேன். அந்தப் பத்துப் பக்கங்களை வாசித்துப் பார்த்த கணவரின் கண்களில் கண்ணீர் வடிந்து பேசத் திணறிப் போனார். "உனக்குள் இத்தனை ஆண்டுகளாக இவ்வளவு மனக்குமுறல்களை வைத்திருந்தாயா? உன் வாழ்வியலையே கட்டுரைகளாக எழுது" என்று என்னை ஊக்கப்படுத்தி நான் ராஜாமகளின் கோதை பதிப்பகம் வழியாக என் முதல் நூலான "தாயில்லாமல் நான்" வெளியானது. பள்ளிப்படிப்பை கூட முடிக்காத நான் தமிழ் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்து, தொடர்ந்து என்னால் இயங்க முடியுமா என்ற தயக்கங்களையும் தாண்டி, தாயில்லா பெண் குழந்தையின் வாழ்வை ஆவணப்படுத்தி இருக்கிறேன் என்ற மனநிறைவுடன், சம்சுல் ஹூதா பானு என்று புத்தக அட்டையில் இருந்த எனது பெயரை பெருமிதத்துடன் தடவிப் பார்த்துக்கொண்டேன்.

**ஒரு கதையை எழுதும்போது முதலில் வருவது – கதைமாந்தரா? காட்சியா?**

கதையெழுதுவதற்கு முன் மனதில் கதைக்கரு உருவாகியிருக்கும். அந்தக் கதைக்கருவில் முதலில் உருவாவது கதை மாந்தர்களே, அதன்பின் கதையின் போக்கை வைத்து காட்சிகள் உருவாகும், அல்லது விரிந்து கொண்டே செல்லும்.

**பெண் எழுத்தாளராக இருப்பதில் நீங்கள் சந்திக்கும் சவால்கள் என்ன?**

நான் குடும்பக் கதைகள், வரலாற்று நாவல்கள், க்ரைம் நாவல்கள் என வாசிக்கும்போது ஆண் எழுத்தாளர்களின் எழுத்தில் காதல் காட்சிகளை எழுதும்போது அதன் நெடி மிகத் தூக்கலாக இருக்கும்.

முக்கியமாக வரலாற்று நாவல்களில் காதலின் விரசம் அதிகமாக இருக்கும். பெண் எழுத்துக்களில் ஒரு சிலரைத் தவிர இது குறைவாகவே இருக்கிறது. காதல், காமம் குறித்து எழுதும்போது எனக்கும் இந்தத் தயக்கம் இருக்கிறது.

சமூகம், குடும்பம் இரண்டும் பெண்ணின் எழுத்தை உற்றுக் கவனித்துக்கொண்டே இருக்கும். இதில் நான் விதிவிலக்கல்ல.

அடுத்ததாக எழுத்து குறித்த ஏதாவது சிந்தனை தோன்றும் போதெல்லாம் அந்த வரிகளை உடனே எழுதி வைத்துக்கொள்ள முடியாதவாறு குடும்பக் கடமைகள் அழைக்கும். பிறகு ஓய்வு கிடைக்கும்போது எழுத உட்கார்ந்தால் சுத்தமாக அந்த வரிகள் நினைவிலிருந்து மறைந்து போகும். எவ்வளவு யோசித்தாலும் வராது. குடும்பத்துக்குள் இருந்து எழுதும் எல்லா பெண்களுக்கும் இந்த பிரச்சினை உண்டு. பெண்கள் எழுதுவதே இங்கு சவால் தானே.... நான் வளர்ந்த சூழலில் நான் பார்த்து வேதனையடைந்த முடை நாற்றம் வீசும் பெண்களின் வாழ்வியலை அப்படியே எழுத வேண்டும் என்பதே என் விருப்பம்.

ஒரு மனித வேதனையை அப்படியே எழுத முடியாதது எனக்கு சவாலாக உள்ளது. அந்த சவாலை எனக்குள் நானே உடைப்பேன் என்ற நம்பிக்கையும் உள்ளது.


**உருவக்கேலி குறித்து உங்கள் பதிவுகளில் நிறைய எழுதியிருக்கீங்க. உருவக்கேலியால் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டது குறித்தும் அதிலிருந்து எவ்வாறு மீண்டு வந்தீங்க என்பதையும் கூறுங்களேன்?**

இந்த நேர்காணலில் எனக்கு பிடித்த முக்கியமான கேள்வியாக இதைக் கருதுகிறேன். உருவக்கேலியே உலகில் இல்லாமல் செய்ய வேண்டுமென்பதற்காக என்னால் முடிந்தளவு எழுத வேண்டும், குரல் கொடுக்க வேண்டும் என்ற உறுதியுடன் இருக்கிறேன்.

உடல் பருமன் என்பது குறைபாடல்ல ஆனால் எந்த உடல் குறைபாடு உள்ளவர்களாக இருந்தாலும் உருவக்கேலி செய்யக்கூடாது என்பதை ஒரு இயக்கமாகவே முன்னெடுக்க வேண்டுமென்பது என் குறிக்கோள்.

காரணம், உடல் பற்றிய விழிப்புணர்வு இல்லாத மிகச் சிறுவயதிலேயே உருவக் கேலியால் கடுமையாக பாதிக்கப்பட்டேன். என் அம்மாவின் அம்மா என்னைப்போல இருப்பார்களாம். என் குடும்ப மரபில் பெரும்பாலும் உடல்வாகு பருமனாக இருப்பவர்கள் தான். பள்ளிக் காலத்தில் உடன் படித்த மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் அங்கமுத்து, குந்தாணி, பிந்துகோஸ் என்று பட்டப்பெயர்களால் அழைக்கப்பட்டேன்.

அந்தக் கோபத்தையெல்லாம் சாப்பாட்டில் காட்டுவேன். இன்னும் அதிகமாக சாப்பிட ஆரம்பித்தேன். ஆனால் பதின்ம வயது வந்தபோது ஒல்லியாக இருப்பது தான் அழகு என்று பொதுப்புத்தியால் எனக்குப் போதிக்கப்பட்டிருந்ததால் பட்டினி கிடப்பது, பேதி மாத்திரை எடுத்துக் கொள்வது என என்னை நானே வருத்திக்கொள்ள ஆரம்பித்தேன். எல்லோரின் கேலியால் நிறைய அழுதது மட்டுமில்லாமல் தற்கொலை முயற்சி வரை செய்திருக்கிறேன்.




எனக்குத் திருமணம் முடிந்த பின்பு கணவர் எனக்கு உறுதுணையாக இருந்தது தான் மிகப்பெரிய ஆறுதல். என்னை உருவக்கேலி செய்யாத ஒரே ஆத்மா அவர்தான். என் உடல் நலனில் அக்கறை காட்டினாரே தவிர. ஒருபோதும் குறையாகப் பார்க்கவில்லை. எனது 26 ஆம் வயதில் உடல் சார்ந்த பிரச்சினையால் கர்ப்பப் பை அகற்றப்பட்டது. அதன்பின் இன்னும் உடல் எடை கூடியது. திரும்பவும் என்னை கேலிப்பேச்சுகள் துரத்தியது. அதீதமாக பெருத்த வயிறால் கால் வலி அதிகமானதால் டம்மிடெக் சர்ஜரி செய்துகொண்டேன். அது எனது மறுபிறவி என்றே சொல்லலாம். அப்போது முடிவெடுத்தேன் இவர்களை சட்டை செய்யாமல் நம் உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று. தொடர்ந்து உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவுக்கட்டுப்பாடு மற்றும் யோகா, தியானம் என்று என்மீது அக்கறை செலுத்த ஆரம்பித்தேன். அப்போது என்னை எனக்கே பிடிக்க ஆரம்பித்தது. செல்ப் லவ் கொடுக்கும் நம்பிக்கையை வேறெதுவும் கொடுக்காது என்பதை அனுபவப்பூர்வமாக உணர்ந்தேன். என்னைப்போல் பாதிக்கப்பட்ட மற்றவர்களுக்கும் நான் சொல்லிக்கொள்வது இதுதான், நம்மை நாம் நேசிக்கத் தொடங்குவோம்.

**நாலு பேருக்கு நன்றி கட்டுரைத் தொகுப்பில் அறியப்படாத அசாதாரண மனிதர்களைக் குறித்து எழுதியிருக்கிறீர்கள்.. அவர்களை எழுத்தில் பதிவுசெய்ய வேண்டும் என்ற எண்ணம் எதனால் எழுந்தது?**

தாயில்லாமல் வளர்ந்த சிறுவயதில் பாசத்திற்காக ஏங்கியபோது எனக்கு மட்டும் தான் சோதனையும் வேதனையும் என நினைத்து இறைவனை நிந்தனை செய்வேன். மனதுக்குள் திட்டித் தீர்ப்பேன். அல்லாகிட்ட சொல்லிதான் கேட்கல, பிள்ளையார்கிட்ட கேட்கலாமா? அவர் பாசத்தை மட்டும் காட்டும் மனுசங்கள தருவாரா? எனக் கேட்கும் அப்பாவி சிறுமியாக இருந்த காலத்தில்,

"அடி சம்சு இந்த கேப்பைக் கருத சுட்டு கசக்கி சொளகுல உமி தட்டி சாப்டு" என்று சொன்ன கஸ்ஸாக் குப்பியை ரொம்ப பிடித்துப் போனது. அவருக்கு ஆயிரம் பிரச்சினைகளும் வலிகளும் இருந்தாலும் அவர் எனக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் அன்பை மட்டுமே கொடுப்பவராக இருந்தார். இதுபோல 'நாலு பேருக்கு நன்றி' தொகுப்பில் நான் பதிவு செய்திருக்கும் அத்தனை மனிதர்களும் உன்னதமானவர்களே. அதுபோன்ற மனிதர்களை இன்று பார்ப்பதே அபூர்வமாக இருக்கிறது. ஆளுமைகள் என்றால் நமக்கு பிரபலமானவர்கள் மட்டுமே நினைவுக்கு வருவார்கள். ஆனால் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளாமல் எந்த விளம்பரமும் இல்லாமல் வாழ்ந்த நான் பார்த்து வளர்ந்த ஆளுமைகள் இவர்கள். அதனால் இவர்களை என் எழுத்தில் பதிவு செய்ய விரும்பினேன்.

என் முதல் நூல் வெளிவந்த பிறகு என்னுள் பூட்டி வைத்த பொக்கிஷமான மனிதர்களை எழுத வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

உண்மையில் அவர்கள் அசாதாரண மனிதர்கள் தான்.



மனோதத்துவம் பற்றித் தெரியாத மன திடம் கொண்ட மனிதர்கள்.
தன்னலம் பார்க்காமல் பிறர்நலம் காப்பவர்களால் உலகில் மழை பெய்கிறது என்பார்கள்.

இன்னும் நாம் உற்றுக் கவனித்தால் மாண்புமிக்க மனிதர்கள் அமைதியாக சமூகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியலாம்.

**சமூக விமர்சனத்தை எழுத்தில் வெளிப்படுத்தும்போது அதை எவ்வாறு சமாளிக்கிறீர்கள்?**


இந்தச் சமூகத்தில் நானும் ஒரு அங்கம் எனும்போது சமூகத்தில் நடக்கும் அநீதிகளை எதிர்த்தோ அல்லது கண்டனத்தையோ பதிவு பண்ணாமல் இருந்தால் அந்த அநீதிக்கு நானும் துணை போனவள் ஆகிறேன்.

எப்ஸ்டீன் பிரச்சினை ஆக இருக்கட்டும், புர்கா அணிந்து ஒரு பெண் நடனமாடினாள் என்பதற்காக அந்தப் பெண்ணை தரக்குறைவாக பேசியவர்களாகட்டும் என்னுடைய எதிர்ப்பை எழுத்தில் பதிவு செய்யாமல் போனால் ஒரு எழுதும் பெண்ணாக இருந்து என்ன பிரயோசனம். உண்மையும் நேர்மையும் நம்மிடம் இருக்கும்போது அது இல்லாதவர்களிடமிருந்து வரும் விமர்சனங்களை புறந்தள்ளி விடுவேன். அவர்களும் தொடர்ந்து நாம் புறக்கணிக்கும்போது ஒரு கட்டத்தில் அமைதியாகிவிடுவார்கள்.

**அடுத்த தலைமுறை பெண் எழுத்தாளர்களிடம் உங்கள் எதிர்பார்ப்பு என்ன?**

பெண் எழுத்தாளர் ஆண் எழுத்தாளர் என்ற பாகுபாடே இருக்க வேண்டாம், சமூகத்தில் நடக்கும் பிரச்சினைகளை அவரவர் சிந்தனைகளுக்கேற்ப எழுதும் முழு சுதந்திரம் வேண்டும். பெண்கள் எழுதினால் பெண் துன்பப்பட்டாள், கஷ்டப்பட்டாள் என்று மட்டுமே எழுதுவார்கள் என்னும் பொதுப்புத்தியை உடைக்க வேண்டும். ஆன்ட்ராய்டுபோன் பயன்படுத்தவே தெரியாதவளாக இருந்து தட்டுத்தடுமாறி கற்றுக்கொண்டு இன்று சமூக வலைதளங்கள் உட்பட பல ஊடகங்களில் எழுதி வருகிறேன்.

அடுத்த தலைமுறைப் பிள்ளைகள் புத்தகம் வாசிப்பதை விட தொடுதிரையில் வாசிப்பதையே விரும்புபவர்களாக இருப்பார்கள். எனவே நவீன தொழில்நுட்பத்தை கற்றுக்கொண்டு, தன்னைப் புதுப்பித்துக் கொண்டே பெண்கள் எழுத்திலும் புதுமைகளைக் கொண்டுவர வேண்டும்.




**இஸ்லாமிய சமூகத்தைச் சார்ந்த பெண்ணாக இருந்துகொண்டு எழுத்தாளராக இருப்பதில் நீங்கள் சந்திக்கும் பிரச்சினைகள் என்ன? நீங்கள் சார்ந்த சமூகம் குறித்து உங்களால் விமர்சனங்களை முன்வைக்க முடிகிறதா?**

இஸ்லாமிய பெண்ணாக இருந்துகொண்டு சமூக ஊடகங்களில் நான் இயங்கத் தொடங்குமுன் உன்னால் பின்னூட்டங்களை தாங்க முடியாது, ஓடி வந்திடுவ... என எனக்கு நிறைய எச்சரிக்கைகள் வந்தன. அதனால் பயத்துடனும் தயக்கத்துடனும் தான் நான் உள்ளே வந்தேன். ஆனால் எனக்கு முன்னால் எழுத வந்த ராஜாத்தி சல்மா போன்ற பெண்களைப் பார்த்து தைரியமும் துணிச்சலும் கொண்டேன். அத்தனை விமர்சனங்களையும் புறந்தள்ளி இன்று ஒரு பாராளுமன்ற உறுப்பினராகி இருக்கிறார்.

அதுபோல என் பெண் இசை கற்றுக்கொண்ட போதும் என் சமூகத்திற்குள் இருந்து எதிர்ப்புகள் வந்தன. பகுத்தறிந்த ஒரு பண்பட்ட எழுத்தையே நான் எழுதினேன்.
ஒருபோதும் நீதியும் நேர்மையும் தவறி நான் எழுதியதில்லை. அதே சமயம் நான் சார்ந்த சமூகத்திற்குள்ளிருக்கும் பிற்போக்குத்தனம் குறித்தும் கேள்விகள் எழுப்பினேன். இதனால் இவள் பெரிய முற்போக்குவாதி என்று பேசினார்கள். பிற்போக்காக சிந்திப்பது தானே தவறு, முற்போக்காளராக இருப்பது தவறில்லையே....

நான் வாசித்த இஸ்லாமிய நூல்களில் இஸ்லாமிய நீதி, இஸ்லாமிய சட்டதிட்டம், வழக்குமொழி என்று தான் கதைகள் இருக்குமே தவிர, நிறைய புனிதப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் நான் பார்த்த நிகழ் உலகம் வேறு மாதிரி இருந்தது. எத்தனையோ பிரச்சினைகள், பெண்களின் பாடுகள், இஸ்லாம் சமூகம் சார்ந்து தற்காலத்துக்குத் தேவையான உரையாடல்கள் எதுவும் பேசப்படவில்லை. இதையெல்லாம் குறித்து யாராவது எழுதியிருக்கிறார்களா என நான் தேடும்போது, தோப்பில் முகமது மீரானின் 'சாய்வு நாற்காலி' வாசிக்க கிடைத்தது. வாசித்து விதிர்த்துப் போனேன்.

அடுத்ததாக களந்தை பீர்முகம்மது எழுதிய 'சிலுக்கு சுமிதாவும் சுலைமான் ஹாஜியாரும்' வாசித்துவிட்டு அவரை நேரில் பார்த்து நன்றி சொல்ல வேண்டுமென தோன்றியது. ஆனால் இவர்களுக்கெல்லாம் முன்னாலேயே சமூகத்தைச் சார்ந்த பெண் பாடுகளை எழுத்தாக்கிய புரட்சிப் பெண் எழுத்தாளர் என அறியப்படும் சித்தி ஜுனைதா பேகம் எழுதிய நூல்கள் எதுவும் எவ்வளவு தேடியும் எனக்கு கிடைக்கவில்லை. அவரின் நூல்கள் பொதுத்தளத்தில் எளிதில் கிடைக்காமல் போனதற்கான காரணம் என்ன? அதற்குப் பின்னாலிருக்கும் அரசியலை நான் கட்டாயம் விமர்சிக்கவும் கேள்வியெழுப்பவும் செய்வேன்.

# ஒரு மனிதனின் கவனக்குறைவு

- முரா. இரக்ஷன் கிருத்திக்.

மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு மளிகைக் கடையை ஏறிட்ட போது கடையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. “எப்பா, எவ்வளவு கூட்டம்” என்றான் எனது மகன். எப்படியும் நாம சாமான்களை வாங்கிட்டு திரும்புறதுக்கு, ஒரு மணி நேரத்திற்கு மேல ஆகிடும் என்றே எனக்கு தோன்றியது.

எனது மகனை என்னோடு என் மனைவி அனுப்பி வைத்ததே “உங்க அப்பன் எங்கேயாவது நின்னு வம்பளந்துட்டு நிற்பான், நீயும் கூட போ, அப்பதான், சட்டுன்னு வருவான்” என்றுதான். இப்போது, தாமதமானாலும் பதட்டமடையத் தேவை இல்லை, சாட்சிக்குதான் ஆள் இருக்கிறதே என்கிற ஆறுதல் இருந்தாலும், ஏன் திடீரென்று இவ்வளவு கூட்டம்? இன்று, நாளை, நாளை மறுநாளுகூட எந்த விஷேச தினமும் இல்லையே என்று யோசித்து கொண்டே சாமான்களை வாங்குவதற்கு எடுத்து சென்றிருந்த பையை வண்டியில் இருந்து கையில் எடுத்துக்கொண்டு மெல்ல நடந்து கடையை நெருங்கினேன். என்னைப் பின்தொடர்ந்து எனது மகனும் கடையின் அருகில் வந்தான்.

‘எனக்கு ஒரு கிலோ தக்காளி', 'அரை கிலோ துவரம் பருப்பு', 'நூறு கிராம் ஆச்சி சாம்பார் தூள்.' என்று ஒரு சிலர் மட்டுமே மளிகைச் சாமான்களைக் கேட்டு கொண்டும், பெற்று கொண்டும் இருந்தனர். மற்றவரெல்லாம், யாரையோ எதிர்ப்பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர். சிலர் பல நாள் மனதிற்குள் தேக்கி வைத்திருந்த சொந்தக் கதைகள், சோகக் கதைகளைப் பகிர்ந்து கொள்ள சந்தர்ப்பம் வாய்த்து விட்டது என்று அருகில் நிற்போரிடம் கொட்டித் தீர்த்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தின் ஊடாக என்னைப் பார்த்துவிட்டு “அண்ணே நீங்களும் மாவுக்காகவா நிற்கறீங்க?” என்றார் கடைக்காரர்.

“இல்ல. கொஞ்சம், மளிகைச் சாமான்தான் வாங்கணும்” என்றேன்.

“இங்க வந்து என்னன்னு சொல்லுங்க. அங்க நின்னு வேடிக்கை பார்த்துட்டு இருந்தா, சாமான் கைக்கு வந்திருமா?” என்றார்.



“இல்ல, எனக்கு முன்னாடி வந்தவங்க, இத்தனை பேரு நிற்குறாங்களே! அதான், யோசனை பண்ணிட்டு நிற்கறேன்” என்றேன்.

“நீங்க வேற, எல்லாம் தோசை மாவுக்கு நிற்கிற கூட்டம். மாவு போடுறவரு இன்னும் வரல, அவர எதிர்ப்பார்த்துதான் எல்லாரும் நிற்கிறாங்க” என்றார்.

வீட்டிலயே அரிசியையும் உளுந்தையும் ஊற வைத்து தங்களது வீட்டில் இருக்கிற ஆட்டு உரலிலோ, மாவு அரைக்கும் மின் இயந்திரத்திலயோ அரைத்து இட்லி, தோசை செய்து சாப்பிட்ட காலம் போயி, அது அதிக வேலை என்பதற்காக மிக எளிதாக கடைகளில் கிடைக்கும் பாக்கெட் மாவுகளையே தற்போது அதிகமாக வாங்கிப் பயன்படுத்துறோம். ஆனால், அதில் இருக்கும் சில மோசமான விஷயங்கள் பற்றி நமக்குத் தெரிவதில்லை.

பாக்கெட்டுகளில் அடைத்து வைத்திருக்கும் மாவு ஒரே நாளில் புளிப்பேறி, புளிப்பு சுவை வராமல் இருக்கவும்

மாவு புளித்துப் போவதால் பாக்கெட் உப்பிக் கொண்டு போகாமல் இருக்கவும் கவரில் புண்களை ஆற்றுவதற்கு பயன்படுத்தும் போரிக் அமிலம் தடவப்படுகிறது. இவ்வகை அமிலம் பாக்கெட்டில் மாவை சேர்ப்பதற்கு முன் தடவப்படுகிறது. இதனால், சில நாட்கள் வரை மாவு புளித்தாலும் வெளியில் தெரியாமல் இருக்கும். போரிக் அமிலம் தடவப்பட்ட பாக்கெட் மாவுகளை வாங்கி சாப்பிடுவதால் நிறைய ஆரோக்கியப் பிரச்சினைகள் உண்டாகும். குறிப்பாக குடலில் பாதிப்பு ஏற்படும். கடுமையான வயிற்று வலி, அஜீரணக் கோளாறு உள்ளிட்ட பிரச்சினைகள் உண்டாகும்.

மேலும், பாக்கெட் மாவு தயாரிக்கப்படும் இடங்களில் மாவை அரைக்க எந்த மாதிரியான தண்ணீர் பயன்படுத்துகிறார்கள் என்றும் நமக்குத் தெரியாது. வீட்டில் அரைப்பது போன்று சுத்தமான தண்ணீரெல்லாம் பயன்படுத்த மாட்டார்கள். அசுத்தமான தண்ணீரைக் கொண்டு மாவு அரைக்கப்படும் போது அது மிக மோசமான உடல் பாதிப்புகளை உண்டாக்கும். குறிப்பாக அதில் ஈகோலி பாக்டீரியாக்களின் பாதிப்பு அதிகமாக இருக்கும். இதனால், நாள்பட்ட வயிற்று வலி, உடல் வறட்சி, டயேரியா, குடல் மற்றும் இரைப்பை சார்ந்த நோய்கள் உண்டாகக் கூடும் என்றாலும் தினமுமா வாங்கப் போறோம் என்று அதை தினம் தினம் வாங்கிப் பயன்படுத்ததான் செய்றோம்.

கடைக்காரர் என்னிடம் பேசிக்கொண்டிருந்த போதே சுமார் நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்து நின்றார். பிறரை உருவக் கேலி செய்வது என்பது தவறானச் செய்கைதான், இருந்தாலும், அதை தவிர்க்க முடியவில்லை. யாராவது கொஞ்சம் வழக்கத்துக்கு மாறாக இருப்பதைப் பார்த்ததும், என்னை அறியாதே அப்படி ஒரு எண்ணம் தோன்றி விடுகிறது, வேண்டுமென்றே செய்வதில்லை. அவரைப் பார்த்ததும் “இந்த மாவு பொட்டலம் என்ன விலை?” என்று கேட்க தோன்றும், அப்படி ஒரு தோற்றத்தில் இருந்தார்.

அவரது மோட்டார் சைக்கிளின் பின்புறம் ஒரு பெரிய பிளாஸ்டிக் கூடை இருந்தது, அதில் நிறம்ப மாவு பொட்டலங்கள் இருந்தது. அவரைப் பார்த்ததும் “உனக்காகத்தான் காத்திருக்கிறோம். ஏன் தாமதம்?” என்றார் காத்திருந்தவர்களில் ஒருவர்.

“ரயில்வே கடப்புல மாட்டிக்கிட்டே…ண்ணே…” என்றார் மாவுக்காரர்.

“ஆமா, ஏதாவது காரணம் சொல்லும். இப்படியே தாமதமா வந்து வந்துதான் வியாபாரத்தைக் கெடுத்துப்புடுதேயரு. எத்தனை பேரு கேட்டு பார்த்திட்டு திரும்பி போயிட்டாங்கன்னு தெரியுமா?” என்றார் கடைக்காரர்.

“என்ன பண்றது அண்ணாச்சி, வழக்கமாக, ஆறர மணிக்கு ஒன்னு, ரெண்டு வண்டிதான் வரும். இன்னைக்குன்னு பார்த்து, ஒட்டுக்க நாலு வண்டி வந்துட்டது.”

“ஏன் ஒரு பத்து நிமிஷம் முன்ன வர்றதுக்கு என்ன?” என்றார் கடைக்காரர்.

“சரி அண்ணாச்சி. இனிமேல, பத்து என்ன? அரை மணி நேரம் முன்னாலேயே வந்துடுறேன்.” என்றவர் தொழிலில் தீவிரமாக இருப்பதைப்போல காட்டிக்கொள்ள “எத்தனை பாக்கெட் வேணும்?” எனத் தாமதம் குறித்து கேட்டவரிடம் கேட்க, அவரோ “மூனு பாக்கெட்” என்றார்.

“மூனா…ண்ணே” என்றவாறு அவர் கடைக்கு வழக்கமாகக் கொடுக்கிற மொத்த மாவு பொட்டலத்தில் இருந்து மூன்று பொட்டலத்தை எடுத்து கொடுத்தார். அவர் வாங்கிக் கையில் இருந்த பையிக்குள் வைத்து கொண்டார். மாவுக்காரர் மீதி பொட்டலங்களை வண்டியில் இருந்து இறக்கிக் கடைக்காரர் வழக்கமாக வைக்க சொல்லுகிற ஒரு பெட்டியில் அடுக்கி வைத்தார். அடுத்த கணம் அங்கே காத்திருந்த எல்லோரும் தங்களுக்கு தேவையான மாவு பொட்டலங்களை எடுத்துக்கொண்டு அதற்குரிய பணத்தையும் கொடுத்துவிட்டுச் சென்றனர்.

முதலில் மூன்று பொட்டலம் வாங்கிய நபர் கூட்டத்தோடு கூட்டமாக ஒரு முழு நூறு ரூபாய்த் தாளை நீட்டி “எனக்கு ரெண்டு.” என்றார். கடைக்காரரும் ஒரு நம்பிக்கையின் பேரில் இரண்டு பாக்கெட் மாவுக்கான பணத்தை மட்டும் எடுத்துகொண்டு மீதி ஐம்பது ரூபாயைத் திருப்பிக் கொடுத்தார்.

பணத்தைப் பெற்றதும், அந்த நபர் மின்னல் வேகத்தில் நடையைக் கட்டினார். அவர் சென்ற வேகம் எதிரே லாரி வந்தால்கூட, அது நசுங்கிப் போயிடும் என்பதுபோல இருந்தது. அதே சமயம் ஏதாவது சிறு புல் தடுக்கியிருந்தாலோ, பின்னிருந்து யாராவது அவரது தோளைத் தொட்டு இருந்தாலோ போதும், அதே இடத்தில் மரணம் சங்கமித்து இருக்கும்.

எனது மகன் காதருகில் வந்து “அப்பா அந்த ஆளு மூன்று பாக்கெட் மாவு வாங்கிட்டு ரெண்டுக்குதான் காசு கொடுத்துட்டு போறாரு.” என்றான். வாயில் ஒற்றை விரலை வைத்து சமிக்ஞையாக ‘பேசாமல் இரு’ என்றேன் நான். அவனும் சட்டென அமைதியாகிவிட்டான். நான் சாமான்களை வாங்கிக் கொண்டிருக்கும்போதே, அதே நபர் திரும்பி வந்து, அதே ஐம்பது ரூபாயைக் கடைக்காரரிடம் நீட்டி “கால் கிலோ துவரம் பருப்பு.” என்றார்.



“இப்பதான மாவு வாங்கிட்டு போனயேரு, அதுக்குள்ள, பருப்புன்னு வந்து நிக்கறயேரு? வீட்டுக்கும் கடைக்கும் நடந்துட்டே இருக்கணும்னு ஏதாவது வேண்டுதல் வச்சிருக்கிறயேரா?” என்றார் கடைக்காரர்.

ஆமா, சாத்தூர் மாரியம்மனுக்கு வச்ச வேண்டுதல். சும்ம இருமய்யா.” என்றவர் தொடர்ந்து… “வீட்டுல பொம்பளைய ஒன்னு ஒன்னா சொல்றாளுவ. மனுஷன நிம்மதியா ஒரு கரையில இருக்கறதைப் பார்த்தாலே பொறுக்க மாட்டக்குது. ஏதாவது ஒரு வேலைய சொல்லிடுறாளுகளா? உமக்கு என்ன? கடையே கதின்னு கெடக்கயேரு… கொடுத்து வச்ச மவராசன்.” என்று சடவு கொள்பவரைப்போல அவரது தவற்றை மறைக்க, வீட்டில் உள்ள பெண்டீரைச் சாடினார்.

அவர் பொய் கணக்கு சொல்லியதை யாராவது கவனித்துவிட்டு சொல்லிவிட்டால் மாட்டிக்கொள்வோம் என்ற குற்ற உணர்வில் வாங்க வேண்டியதை மறந்துவிட்டு சென்றிருக்க வேண்டும். ஒருவரிடம் மறைப்பதற்கு எதுவும் இல்லாவிட்டால், அவர் எந்த அச்சத்தையும் எதிர்கொள்ள வேண்டியதில்லை. அதாவது மடியில் கனம் வழியில் பயம் என்ற பழமொழியைப் போல. இப்போது, அவர் வந்தது என்னை பொறுத்தவரை இரண்டு விஷயங்களுக்காகதான் இருக்கும் என்று எனக்கு தோன்றியது. ஒன்று தனது திருட்டு தனத்தைப் பற்றி ஏதேனும் பேச்சு வருகிறதா? என்பதை அறிய வந்திருக்கலாம், மற்றொன்று நான் முன்பு கூறியதுபோல அவர் பதட்டத்தில் வாங்காமல் விட்டு சென்ற பொருளை வாங்குவதற்காக இருக்கலாம்.

நான் சாமான்களை வாங்கிவிட்டு, அதற்குரிய பணத்தையும் கொடுத்துவிட்டு கிளம்ப தயாரான போது “உனக்கு என்ன வேண்டும் தம்பி?” என்றேன்

எனது மகனிடம். எப்போதும் அவனாகவே அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டு மளிகைப் பொருட்கள் வாங்கிய தொகையில் பாதி அவனுக்கு தின்பண்டம் வாங்கியதாகதான் இருக்கும். அன்று “என்ன வேண்டும்?” என்று நான் கேட்டும் “எனக்கு எதுவும் வேண்டாம்.” என்று கூறிவிட்டான்.

கடைக்காரர்கூட “என்ன உடம்புக்கு ஏதும் சரியில்லையா?” என்று கேட்டு விட்டார். “அதெல்லாம் ஒன்னுமில்ல, நல்லாதான் இருக்கிறான்.” என்று சொல்லிவிட்டு அழைத்து சென்றேன். மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து எப்போதும் என்னிடம் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிப் தொணதொணவென்று பேசிக்கொண்டே வருகிறவன் அன்று எதுவும் பேசாமல் அமைதியாகவே இருந்தான். அந்த நபர் செய்த திருட்டு, அவனது மனதில் ஏதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஒரு விஷயம் எனக்கு கொஞ்சம் தாமதமாகதான் புரிந்தது, அவன், என்னைப் பற்றி நினைத்து கொண்டிருந்த எதோ ஒரு பிம்பம் உடைப்பட்டிருக்க வேண்டும். அதைப் பற்றிதான் யோசித்து கொண்டிருக்கிறான் என்பது.

ஒரு முறை இதுபோல நானும் அவனும் நியாய விலைக்கடைக்கு ரேஷன் வாங்கச் சென்றிருந்தோம். அங்கே பொருள்கள் விநியோகஸ்தர் எடையில் குளறுபடி செய்து கொண்டிருந்தார். அதாவது, எடை வைக்கும் இயந்திரத்தில் எடைய வைக்கும் பாத்திரத்தோடு சேர்த்து எடையை பூஜ்ஜியத்தில் வைப்பதைத் தவிர்த்துவிட்டு இயந்திரத்தை மட்டும் பூஜ்ஜியத்தில் வைத்து கொண்டு பொருளின் எடையை பாத்திரத்தின் எடையோடு சேர்த்து அளவிட்டு சாமான்களைக் கொடுத்து கொண்டிருந்தார். நான் அதைப் பார்த்துவிட்டு கடைக்காரரைச் சத்தம் போட்டு எடையை சரி செய்தேன். நான் பார்ப்பதற்கு முன் பொருள் கொடுத்திருந்த எல்லோரையும் அழைத்து வந்து மறுபடியும் அவர்களது பொருளின் எடையை அளவிட்டு சரியாக கொடுக்கச் சொன்னேன். எல்லோருக்கும் அரை கிலோ, ஒரு கிலோ எடை குறைவு இருந்தது. எல்லோரும் என்னைப் பாராட்டி விட்டு சென்றதைப் பார்த்து என் மகனின் பார்வையில் நான் ஒரு கதாநாயகனைப்போல தெரிந்தேன்.

அதன் பிறகு எங்கேயாவது யாராவது குற்றம் புரிந்தார்கள் என்றால் “என் அப்பா மட்டும் இருந்திருந்தால், இங்கே நடந்திருக்கிற நிகழ்வே வேற” என்று மற்ற எல்லோரையும் சீண்டி விடுவான். இவ்வாறான, ஒரு பார்வைதான் அவனுக்கு என் மீது இருந்தது. இந்த இடத்தில் நான் மௌனம் காத்ததினால் அவன் மனம் உடைந்து போனான்.

இதை அப்படியே விடக்கூடாது, எப்படியாவது சரி செய்துவிட வேண்டுமென்று நான் முடிவு செய்தேன்.

மறுநாள் வியாபாரம் குறைவாக இருக்கும் நேரம் பார்த்து, கிட்டத்தட்ட உச்சி வேளையில் எனது மகனையும் அழைத்து கொண்டு அந்த கடைக்கு வந்தேன். முந்தைய நாள் திருட்டைச் செய்த நபர் யா ர் என்று தெரிவிக்காமலேயே கடைக்காரரிடம் நடந்த சம்பவத்தை மட்டும் சொன்னேன். ‘ஒரு மனிதனின் கவனக்குறைவுகூட இன்னொரு மனிதனைத் திருடனாக்கி விடும்’ கொஞ்சம் கவனமாக வியாபாரம் செய்யும்படி சொல்லிவிட்டு சென்றேன்.

என்னப்பா பண்ற,? நேத்தே கையோடப் பிடிச்சிக் கொடுக்கிறத விட்டுட்டு இன்னைக்கு வந்து சொல்லிட்டு இருக்கிற? யார் அப்படி செய்ததுன்னு வேற சொல்ல மாட்டேங்கற?” என்றான் என் மகன்.

“"தம்பி இந்த கடையில கண்காணிப்பு காணொளி இருக்குது, அத வச்சி யார் அந்த நபருன்னு கடைக்காரர் கண்டு பிடிச்சிருவார், நாம காட்டிக்கொடுக்கணும்னு அவசியம் இல்லை. அதுவுமில்லாம நல்ல வியாபாரின்னு சொல்றவன் குற்றவாளி யாருன்னு கண்டு பிடிச்சு தண்டிக்கிறவன் இல்ல. குற்றவாளிய திருத்தி அவனோட வியாபாரம் செய்றவன். அவன் நல்ல வியாபாரியா இல்லையான்னு இனிமேல், நாம கடைக்கு வரும்போது தெரிந்துவிடும்.” என்றேன்.



“அதுபோக அவரைக் காட்டிக்கொடுத்து அசிங்கப்படுத்திவிடக் கூடாது. அது பகையைதான் வளர்க்கும். இந்த உலகம் எப்போதும் நம்மை கவனித்து கொண்டே இருக்குது என்பதை அவருக்குப் புரிய வைக்கணும்.

ஒரு மனிதனை அவனது பிம்பம் உடையாதிருக்கும் போதுதான் அவனக் கட்டுப்படுத்த முடியும். அவன் அப்படித்தான் என்பதை உலகம் அறிந்து கொண்டால். அதைத் துணிச்சலோடு செய்ய ஆரம்பிச்சிடுவான். அவன நல்லவனைப் போலக் காட்டிதான் திருத்த வேண்டும்.” என்றேன்.

மறுநாள் என் மகனோடவே கடைக்கு வந்தேன். மாவு பொட்டலத்தைக் கடைக்குள்ளே வைத்துகொண்டு அவரே கேட்போருக்கு எடுத்து கொடுத்தார். மாவு பொட்டலத்தை உள்ளே வைத்ததற்கான காரணத்தையும், அவரே எல்லா வாடிக்கையாளரிடமும் பகிர்ந்து வந்தார். அதே சமயம் அங்கே நடப்பவைகளை மூன்றாவது கண்ணாகக் கண்காணிப்பு காணொளி கவனித்து கொண்டிருக்கிறது என்பதையும் சொன்னார். ‘இங்கே கண்காணிப்பு காணொளி பொருத்தப்பட்டுள்ளது.’ என்று எழுதியும் வைத்தார்.

மாவு பொட்டலத்தை அதிகமாக எடுத்து சென்ற அந்த வாடிக்கையாளரிடமும் இந்தத் தகவலை பகிர்ந்திருக்கக் கூடும் என்று நம்புறேன். ரேஷன் கடையில் நான் கவனத்துடன் செயல் பட்டதால் திருட்டுத் தவிர்க்கப்பட்டது.

அப்படியென்றால், முதலில் பொருள் வாங்கிய நபரின் கவனக்குறைவுதானே விநியோகஸ்தரை தொடர்ந்து தவறு செய்ய வைத்தது. மளிகைக்கடைக்காரரின் கவனக்குறைவுதான் அந்த நபரைத் திருடனாக்கியது, ஆக, தவறு மளிகைக்கடைக்காரரிடம்தானே உள்ளது” என்ற கேள்வியை எனது மகனின் முன் வைத்தேன்.



# 'கணியன் பூங்குன்றனார் விருது' பாராட்டு விழா மற்றும் கேலக்ஸியின் புத்தக வெளியீட்டு விழா



தமிழக அரசின் 'கணியன் பூங்குன்றனார்' விருது பெற்ற அதீப் குழுமத் தலைவர் டாக்டர். அன்சாரி அவர்களுக்கு கேலக்ஸி நடத்திய பாராட்டு விழாவும், புதிய புத்தகங்களின் வெளியீட்டு விழாவும் பிப்ரவரி 1-ம் தேதி அதீப் அலுவலக உள்ளரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வினை திரு. பிலால் அலியார் அவர்கள் தொகுத்து வழங்க, அமீரக தேசிய கீதம், நமது தேசிய கீதம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்வு தொடங்கியது. வரவேற்புரையை திரு. சதீஷ் குமார் அவர்கள் வழங்கினார். திரு. அன்சாரி அவர்களைக் குறித்த தொகுப்பு வீடியோ ஒளிபரப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் டாக்டர் செந்தில் குமார் ராஜசேகரன் (Former Dean - Kalifa Medical university), திரு. ஜெயபாலன் (Philontehrapist - UK), திரு. முபாரக் முஸ்தபா (Former President ISC Al Ain), திரு. சிவகுமார் (President, அபுதாபி தமிழ் மக்கள் மன்றம்), டாக்டர் சிவராமன் (Senior surgeon - burjeel hospital, President - பாரதி நட்புக்காக),

திரு. இளஞ்செழியன் (MD, Switch Gear), திரு.ஜமால் (தலைவர், ஐமான் சங்கம்), திருமதி.உமா புகழேந்தி, திருமதி. ஸ்ரீதேவி (புதுமைத் தமிழச்சி), திரு. வசீர் (Adeeb Group), கேலக்ஸியின் திருமதி ஜெஸிலா, திரு.பிரதோஷ் பாஷா, திரு. பாலாஜி பாஸ்கரன் மற்றும் இந்தியத் தூதரகத்தின் சார்பில் திருமதி. அமுதா இராஜாமணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். மேலும் அன்சாரி அவர்களின் சகோதரி திருமிகு. ரூபி அவர்கள் தனது தம்பி குறித்துப் பேசியது நிகழ்வுக்கு கூடுதல் மெருகூட்டியது என்றால் மிகையில்லை. அவரின் பேச்சில் 'எங்களை எல்லாம் எங்க தம்பி அரவணைத்துக் கொண்டு செல்கிறார். என்னை மட்டுமல்ல என் பேரப்பிள்ளைகள் வரை அவர்தான் பார்க்கிறார். என் தம்பிகள் எங்க அம்மா மீது அதீத பாசம் வைத்திருக்கிறார்கள். அதுவும் அன்சாரி காலையில் எழுந்ததும் எங்க அம்மாவின் அறைக்குத்தான் வருவார். எங்க அம்மாவுடன் நேரம் செலவழிப்பார், எங்க தம்பிகள் அம்மாவை அப்படிப் பார்த்துக் கொள்கிறார்கள். என்னை என் தம்பிகள் அக்கா என்று அழைப்பதில்லை மம்மி என்றுதான் கூப்பிடுவார்கள்.

நானும் அன்சாரியை எனது வாப்பாவாகத்தான் பார்க்கிறேன். எங்க வாப்பா இடத்தில் இருந்து அவர்தான் எங்களை வழி நடத்திச் செல்கிறார். அவருக்கு நீண்ட ஆயுளை இறைவன் கொடுக்கட்டும். அவர் இன்னும் நிறைய விருதுகளை வாங்க வேண்டும்' என்றார்.

திரு. அன்சாரி அவர்கள் தனது ஏற்புரையில், 'எங்க வாப்பா பேனாதான் விற்றார்கள். அவர் யாருக்காக இருந்தாலும் பேனாவைத்தான் பரிசாகக் கொடுப்பார். அதைப் பார்த்து வளர்ந்ததால் நானும் எல்லாருக்கும் பேனாவையே பரிசாகக் கொடுப்பேன். எங்க ஊர்ல ஒரு இல்லம் இருந்தது. அந்த இல்லத்துல தினமும் யாராவது ஒருவர் சாப்பாடு கொடுப்பார்கள். யாரும் கொடுக்காத அன்னைக்கு என்னிடம் சொல்லுங்கள் நான் தருகிறேன் என்று எங்க வாப்பா சொல்லி வைத்திருந்தார். அப்போது அவருக்கு அதிக வருமானம் எல்லாம் இல்லை என்றாலும் பிறருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற குணம் இருந்தது. அந்த இல்லத்தின் நிர்வாகி, எங்க இல்லத்துக்கு எல்லா நாளும் சாப்பாடு கொடுக்கும் கொடையாளிகள் உண்டு. அதான் யாருமில்லை என்றால் உங்க வாப்பா கொடுத்துடுவாரே என்று சொல்வார். எங்க அப்பாவின் அந்தக் குணம் எங்களிடமும் இருப்பது சந்தோசமே'.

'எங்க அக்காவை நாங்க மம்மினுதான் சொல்வோம், எங்களுக்கு அவங்க அம்மாதான். எங்க வேலையைப் பொறுத்தவரை என்னோட அண்ணன் தொழில் சம்பந்தப்பட்ட சட்ட அலுவல்கள் அனைத்தும் பார்த்துக் கொள்வார், தம்பி வசீர் அலுவலக விசயங்கள் எல்லாத்தையும் பார்த்துக் கொள்வார் என்பதால் நான் கிடைக்கும் நேரத்தில் எல்லாம் வீட்டுக்குப் போய் அம்மாவுடன் நேரத்தைச் செலவழிப்பேன். வசீரை நான் தொழில் சம்பந்தமாகச் செல்லும் எந்த இடத்திலும் தம்பி என்று சொல்வதில்லை, அவரும் அப்படியே நடந்து கொள்வார். பதினைந்து வருடத்துக்குப் பிறகுதான் தொடர்ந்து நாங்கள் மீட்டிங்கிற்குச் செல்லும் ஒரு கம்பெனியில் அவர் என் தம்பி என்பதைக் கண்டுபிடித்தார்கள். நாங்க எல்லாரும் ஒன்றாக இருக்கக் காரணம் எங்க வீட்டுப் பெண்கள்தான். அவர்கள் எந்த விசயத்திலும் தலையிடுவதில்லை. வீட்டில் கூட அலுவலகம் தொடர்பாக காரசாரமாகப் பேசிக் கொள்வோம், அவர்கள் ஏன்..? எதற்காகச் சண்டையிடுகிறீர்கள்..? என்று கேட்பதே இல்லை. குறிப்பாக வசீரின் மனைவியை நீங்கள் எல்லாம் சந்திக்க வேண்டும். அவர் ரொம்ப அருமையான பெண். 'நான் கோபமே படமாட்டேன் என்று சொன்னார்கள், எனக்கும் கோபம் வரும். வசீருக்கு கோபமெல்லாம் வராது, அவரும் நானும் ஒருமுறை காரில் செல்லும்போது ஏதோ ஒரு விசயத்தில் முட்டிக் கொள்ள, என்னை இறக்கிவிடு நான் டாக்ஸியில் வந்து கொள்கிறேன் எனச் சத்தமிட்டு, அவர் எவ்வளவோ சொல்லியும் இறங்கிவிட்டேன், ஆனால்



அவர் அங்கிருந்து போகாமல் நின்று என்னைச் சமாதானப்படுத்தி கூட்டிக் கொண்டுதான் போனார்'.

'என்னை எங்க வாப்பா படிக்க வைத்தார், அவரோட விருப்பமே நான் நன்றாகப் படிக்க வேண்டும் என்பதுதான் அதனால்தான் நானும் படிப்பதில் ஆர்வம் காட்டினேன். என்னாலான உதவிகளை படிப்பவர்களுக்குச் செய்கிறேன், நமக்கு இறைவன் கொடுக்கிறான் என்றால் இல்லாதவர்களுக்கு செய்ய வேண்டும் என்பதற்காகத்தானே. எங்க அக்கா என்னை வாப்பா என்று சொல்வதாகச் சொன்னார். எங்க வீட்டுல எல்லாரும் என்னைய நீ வாப்பா மாதிரி இருக்கே, அவர் மாதிரி உன்னோட குணம் இருக்குன்னு சொல்லச் சொல்ல நானும் வாப்பா ஆயிட்டேன். என்னைப் பொறுத்தவரை தினமும் காலையில் எனது அறையைச் சுத்தம் செய்து மேசையில் எல்லாவற்றையும் ஒழுங்காக எடுத்து வைக்கும் அலுவலக உதவியாளர் முக்கியமானவர்தானே, ஆமாம் நான் ஆபீஸ் பாய் என்று சொல்வதில்லை அவர்களை அலுவலக உதவியாளர் என்றுதான் சொல்வேன். எங்களது லைப்ரரியில் இருக்கும் புத்தகத்தை அலுவலக ஊழியர்கள் எடுத்துப் படிக்க விரும்பினால் அலுவலக நேரத்திலேயே வாசிக்கச் சொல்வேன். எனது ஊழியர்களை நான் எப்போதும் வேலை செய்யும் ஆட்களாக மட்டுமே பார்ப்பதில்லை, அவர்களும் என் குடும்பத்தில் ஒருத்தர்தான்.



நான் மாதமாதம் சிறந்த தொழிலாளியைத் தேர்ந்தெடுத்துப் பாராட்டுவதாகச் சொன்னார்கள், அதெல்லாம் செய்வதால்தான் இப்போது இந்த இடத்தில் இருக்கிறோம்' என்று மிகவும் சரளமாக, சிறப்பாக, மகிழ்வோடு பேசினார்.திரு. அன்சாரி அவர்களுக்கு கேலக்ஸி சார்பில் பொன்னாடை போர்த்தப்பட்டது. நினைவுப்பரிசாக கேடயமும் புத்தகங்களும் வழங்கப்பட்டன. பாராட்டு விழாவைத் தொடர்ந்து கேலக்ஸியின் புத்த வெளியீடு நடைபெற்றது. நூல்கள் பற்றிய அறிமுகத்தை கேலக்ஸியின் பாலாஜி பாஸ்கரன் அவர்கள் வழங்கினார். சென்ற ஆண்டு கேலக்ஸி நடத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றி பெற்ற கதைகளின் தொகுப்பான 'பிணையல்' புத்தகத்தின் முதல் பிரதியை அன்சாரி அவர்கள் வெளியிட, பரிவை சே.குமாரும், இராஜாராமும் இணைந்து பெற்றுக் கொண்டார்கள். இரண்டாவது பிரதியை பரிவை சே.குமார் வெளியிட அன்சாரி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

திரைக்கதை ஆசிரியர், எழுத்தாளர் கண்மணி ராஜா முகம்மது அவர்களின் 'பாதாள கரண்டி' என்னும் சிறுகதைத் தொகுப்பினை முபாரக் முஸ்தபா அவர்கள் வெளியிட, முதல் பிரதியை ஜெயபாலன் அவர்களும் இரண்டாவது பிரதியை ஜமால் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

எழுத்தாளர் தெரிசை சிவாவின் 'அயலோன்' நாவலை மருத்துவர். சிவராமன் வெளியிட முதல் பிரதியை உமா புகழேந்தி அவர்களும் இரண்டாவது பிரதியை மருத்துவர். செந்தில் குமார் அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

திருமதி. ரூபி, திரு. வசீர் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டது. வந்திருந்த சிறப்பு விருந்தினர்கள் திரு. அன்சாரி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். அதீப் அலுவலக நூலகத்துக்கு கேலக்ஸியின் சார்பாக புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. இரவு விருந்துடன் விழா மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது.





# நிஸ்வாவின் நிழலில் (பகுதி – 7)
# பச்சைமலை!!!



இளங்கோ ராமசாமி

அரபியில் “ஜபல்” என்றால் ‘மலை’ என்றும் “அக்தர்” என்றால் ‘பச்சை’ என்றும் பொருள். தமிழ்நாட்டின் உதகையைப் போல் ஓமானுக்கு வாய்த்த கோடை வாசஸ்தலம் இந்த ‘அல் ஜபல் அல் அக்தர்’ என்றறியப்படும் பச்சமலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது தான் நான் கடந்த அத்தியாயத்தில் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டேன்.

‘பச்சை மலை’ எனப் பெயர் பெற்றிருந்தாலும் எங்கு பார்த்தாலும் மொட்டைப் பாறைகளாகவே கண்ணுக்குத் தட்டுப்படும். நான் உதகையோடு ஒப்பிட்டதாலும் இந்த மலையின் பெயரில் “பச்சை” இருப்பதாலும், நமது மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கும் பசுமை மாறாக் காடுகள் போல எதனையும் எதிர்பார்த்து இந்தப் பக்கம் வந்து விடாதீர்கள். அதற்குப் பதில் ‘ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ தான் சர்க்கரை’ என்ற பழமொழியை நினைவுறுத்திக் கொள்ள வேண்டுகிறேன். மற்ற ஓமானிய மலைக் கிராமங்களோடும் தோப்புக்களோடும் ஒப்பிட்டால் ஜபல் அக்தர் சற்றே வித்தியாசமாகவும் பரப்பளவில் பெரியதாகவும் இருப்பதே பெயர்க் காரணம்.

மூர்த்தி சிறிதென்றாலும் கீர்த்தி பெரிதென்பதற்கிணங்க சிறிதளவே இருந்தாலும் இந்த ஜபல் அக்தரின் படித்தோட்டங்கள் வசந்த காலத்தில் நம் கண்களுக்குக் குளிர்ச்சியளிப்பன. பருவத்தில் காய்த்துக் குலுங்கும் இங்குள்ள ஆலிவ், ஏப்ரிகாட் மற்றும் பச்சைப் பசேலென்ற மாதுளை மரங்கள் நம் விழிகளை வியப்பில் விரியச் செய்வது இயல்பு. அதுவும் குண்டெறிதல் போட்டியில் பயன்படுத்தப்படும் குண்டுகளைப் போல கனக்கும் ஜபல் அக்தர் மாதுளம் பழங்களது சுவையை நீங்கள் உலகில் வேறெங்கும் ருசித்திருக்க முடியாது. ஒற்றைப் பழம், அளவைப் பொறுத்து 230 ரூபாயில் 700 ரூபாய் வரை விலை போகும். மக்கள் பருவகாலத்தில் அவற்றைப் பெட்டி பெட்டியாக வாங்கிச் சென்று சுவைத்து மகிழ்வர். பேரமெல்லாம் கிடையாது. “இஷ்டம்னா வாங்கு கஷ்டம்னா போய்க்கிட்டே இரு” என்னுமளவிற்கு அந்தக் கனிகளுக்கு மதிப்பு.

மார்ச் மாதத்தில் இருந்து மே மாதம் வரை ஜபல் அக்தரில் டமாஸ்கஸ் ரோஜா எனப்படும் பன்னீர் ரோஜா சீசன்.

ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் ‘அனந்தாரா’ என்ற நட்சத்திர விடுதியின் பின்புறம் இருக்கும் "அல் எய்ன்" என்ற கிராமத்தில் இருந்து “அல் அக்கர்” என்ற கிராமத்திற்குச் செல்லும் ஒற்றையடி மலைப் பாதையில் நடப்பது அலாதியான அனுபவம்.


வலது புறத்தில் உயர்ந்த மலையும் இடது புறத்தில் அடுக்கடுக்காக வளைந்தும், நீண்டும் கிடக்கும் பச்சை வண்ணப் படிக்கட்டுத் தோட்டங்களும், அவற்றிற்குக் கீழே சரேலெனச் சரிந்து கீழிறங்கும் பள்ளத்தாக்குமாகக் கொள்ளை கொள்ளும் இயற்கையழகு “யேஹ் தில் மாங்கே மோர்” என நம்மை வாய்விட்டுக் கூவச் செய்யும். அப்படி நாம் இடும் கூக்குரல், சூழ்ந்திருக்கும் மலை முகடுகளில் பட்டு எதிரொலித்து, அலையலையாக “மோர்… மோர்… மோர்…” என வெகு நேரம் நம் செவிப் பறைகளை வந்து மோதிக் கொண்டே இருக்கும்.

தொலைவில் தெரியும் “அல் அக்தர்” கிராமத்தின் தோப்புக்களை அடைவதற்கு வெகு தூரத்திற்கு முன்பே அக்கிராமத்தின் ரோஜாத் தோட்டத்தில் இருந்து தென்றலின் தோளில் ஏறி வரும் நறுமணம் நம் சுவாசப் பைகளை நிரப்பி நம்மைக் கிறுகிறுக்கச் செய்யும். ஆனால் அந்தச் சுகந்தம் வீசிய தூண்டிலில் வகையாகச் சிக்கிய நமது கால்கள் அந்தப் பூந்தோட்டங்களைக் காணும் ஆவலால் சுண்டப்பட்டு புயல் வேகத்தில் பாயும். கண்ணுக் கெட்டிய தூரம் வரை கொத்துக் கொத்தாக மலர்ந்து கிடக்கும் ரோஜாக்களை கண்ட மனம் கள்ளுண்ட மந்திகளைப் போலக் கிறங்கித் துள்ளாட்டம் போடும்.

விண்மீன் மின்னிதழ்



இந்த இரண்டு கிராமங்களிலும் சிதிலமடைந்து குட்டிச்சுராகவும் மாட்டுக் கட்டுத் தரைகளாகவும், ஆட்டுப் பட்டிகளாகவும் கிடந்த இடிபாடுகள் இன்று மராமத்துப் பார்க்கப்பட்டு, புத்தம்புது அரிதாரங்களைப் பூசிக்கொண்டு, நவீன வசதிகளுடனான தங்கும் விடுதிகளாக உருமாறி விட்டதைப் பார்க்கும் போது என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை.



நான் முதன் முதலில் கண்ட நமது ஊரின் மூத்திரச் சந்துகளுக்கு ஒப்பான அப்பழைய கிராமங்கள் மெல்லமெல்ல உருமாறுவதைப் பார்க்கும் போது ஒரு புறம் மகிழ்ச்சியும் மறுபுறம் தமிழ்நாட்டில் இருக்கும் எங்களது பூர்வீக கிராமத்தின் நிலை குறித்த வருத்தமும் ஒரே சமயத்தில் மனதிற்குள் அலையடிப்பது வழக்கமாகிப் போய் விட்டது. இன்னும் ஒரு சில ஆண்டுகளில் இந்தக் கிராமங்கள் செல்வச் செழிப்பு மிக்க புகழ் பெற்ற ஐரோப்பிய கிராமங்களைப் போல மினுக்கப் போவது திண்ணம்.

இரண்டாவது கிராமத்தைத் தாண்டி மூன்றாவது கிராமமான “அஸ் ஷிரை ஜா” வை அடைந்தால் ஜபல் அக்தரின் W 18 b என்ற புகழ்பெற்ற முன்று கிராம மலைப் பாதையை நிறைவு செய்த சாதனைக்குச் சொந்தக்காரர்களாவீர்கள்.

இந்த மலைவாசஸ்தலத்தில் “அனந்தரா” மற்றும் “அலிலா” போன்ற ஐந்து நட்சத்திர விடுதிகளுக்கு இணையாக ஓமானிகளின் சிறு சிறு பாரம்பரிய மண் மற்றும் கல் விடுதிகளுக்குக் கட்டணம் வசூலிக்கின்றனர். அவைகளில் தங்கும் தனித்துவமான அனுபவத்திற்காக மேற்குலகச் சுற்றுலாப் பயணிகள் ஒவ்வோர் இரவிற்கும் பல்லாயிரங்களைக் கொட்டிக் கொடுக்கின்றனர்.

ஒரு ரியால் காசு செலவழித்தால் அந்தத் தோப்புக்குள் இறங்கி, ஒரு சிறு பூக்கூடையில் ஒரு டஜன் ரோஜாக்களைப் பறித்து வந்து உங்கள் மனதிற்குப் பிரியமானவர்களுக்குக் கொடுக்கலாம். அந்த அனுபவத்திற்கு கோடி ரூபாய் கொடுத்தாலும் ஈடாகாது.

அப்படிப்பட்ட ஒரு விடுதி “தி க்ளிஃப்”. ஜபல் அக்தர் நகரத்தின் மையத்தில் இருந்து 30 நிமிட தொலைவில் உள்ளொடுங்கி இருக்கும் “அல் சோவ்க்ரா” (Al Sowagra) ஒரு சிறு மலைக் கிராமம். அந்தக் கிராமத்தில் மொத்தம் ஐந்து குடும்பத்தினர் மட்டுமே வாழ்கின்றனர்.

இந்த இரண்டு ஊர்களிலும் ரோஜா இதழ்களில் இருந்து சாறு பிழிந்து எடுத்து அதனைக் காய்ச்சிப் பன்னீர் போன்ற ஒரு நறுமணத் திரவத்தைப் பாரம்பரிய முறைப்படி தயாரிக்கும் குடிசைத் தொழில் இன்று வரை நடை பெற்று வருகிறது. ஒரு சிறு தொகையைக் கட்டணமாகக் கட்டினால் செய்முறை விளக்கத்தைக் கண்டு ரசிக்கலாம். இந்த ரோஜா நீர், புகழ் பெற்ற ஓமானி அல்வாவின் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. இது நறுமணத் தைலமாகவும், மருத்துவ குணமுள்ள நிவாரணியாகவும் ஓமானிகளால் பயன்படுத்தப்படுகிறது.



ஐம்பதாண்டுகளுக்கு முன்புவரை பாதுகாப்பிற்காக அவர்கள் ஒரு பெரும் கணவாயின் மறுபுறம் மலையின் விளிம்பில் சிறு சிறு வீடுகளில் வாழ்ந்து வந்திருக்கின்றனர். கணவாயைத் தாண்டி எதிரிகள் ஊருக்குள் நுழைவது சாத்தியமேயில்லையல்லவா?

சுல்தான் காபூஸ் பதவியேற்று நாட்டை மறுமலர்ச்சிப் பாதைக்குக் கொண்டு வந்த பிறகு வெளியுலகோடு தொடர்பு கொள்ள வசதியாகத் தங்களது பழைய வீடுகளைக் கைவிட்டு கணவாயைத் தாண்டி மேட்டிற்கு வந்து நல்ல வசதியான நவீன வீடுகளைக் கட்டிக் குடியேறியுள்ளனர்.

அங்கிருந்து அரசு வேலைகள், குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது, மருத்துவமனை, நீராதாரம் என அவர்களும் பிற ஓமானிகளைப் போல தங்களைப் பொது நீரோட்டத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களது பழைய குடியிருப்புப் பகுதிக்கு மேலே ஒரு மிகப் பெரிய குகை இருக்கிறது. “அமர்” என்ற பெயர் கொண்ட அந்தப் பெரிய குகை அவர்களது குடும்ப சொத்து.

2015 ஆம் ஆண்டு அந்த குகைக்குள் இறங்கும் ஒரு சாகசப் பயணத்திற்காக, மலையேறுபவர்களுக்கான ஃபேஸ்புக் குழு ஒன்றோடு இணைந்து அந்தக் கிராமத்திற்கு முதன் முறையாகச் சென்றிருந்தேன். அப்போது அந்த இடிபாடுகளைப் புனரமைத்து ஒரு சிறு ரிசார்ட்டாக மாற்றும் திட்டம் இருப்பதாகக் கூறினர். அந்தக் குகைக்குள் எங்களை அழைத்துச் சென்ற இளைஞர்களில் இருவர் என்னிடம் அப்போது படித்துக் கொண்டிருந்த மாணவர்கள். நுழைவாயிலில் இருந்து கடைசி வரை செல்ல 45 நிமிடங்கள் பிடித்தது. அது ஒரு அலாதியான வாழ்வில் மறக்க முடியாத அனுபவம்.

அதன் பிறகு பல வருடங்களுக்குப் பிறகு அதாவது கொரோனா ஊரடங்கெல்லாம் தளர்த்தப் பட்ட பிறகு ஒரு முறை நண்பர்களுக்கு அந்த ஊரைச் சுற்றிக்காட்ட அங்கு சென்றவன் அதிசயித்துப் போனேன். கணவாயின் மறுபுறம் இருந்த பழைய கல் வீடுகளைப் புதுப்பித்து மிக அழகிய ரிசார்ட்டாக மாற்றி விட்டிருந்தனர்.

ஒரு முறை எனது திருமண நாளிற்கு இன்ப அதிர்ச்சியாக எனது இணையரை அழைத்துக் கொண்டு சென்று அந்த ரிசார்ட்டில் ஓரிரவு தங்கியிருந்து விட்டு வந்தேன். இன்று வரை “நீங்கள் அளித்த பரிசுகளிலேயே மிகச் சிறந்தது அந்த இரவு அங்கு தங்கியது தான்” என அவ்வப்போது அவர் குறிப்பிடுவதுண்டு.

அவ்வளவு நிசப்தமான இரவை நாங்கள் அதற்கு முன்னும் பின்னும் என்றும் அனுபவித்து உணர்ந்ததில்லை. வானில் மின்னும் விண்மீன்களைத் தவிர வேறெந்த வெளிச்சப் புள்ளியும் கண்களுக்குத் தட்டுப் படாத அந்த ஏகாந்த இரவு வாழ் நாள் முழுமைக்கும் நினைவை ஆக்கிரமித்திருக்கும் வல்லமை பெற்றது.

அந்தக் கணவாய்குள் மூட்டை முடிச்சுகளை எடுத்துக் கொண்டு இறங்கி ஏறுவது சிரமம் என்பதால் மின் மோட்டாரால் இயக்கப்படும் கயிற்றுத் தொட்டிலொன்றை அமைத்திருக்கின்றனர். கணவாயைக் கடக்கும் இடத்தில் மரத்தாலான ஒரு சிறு தொங்கு பாலம் இருக்கிறது. ஆங்காங்கே அழகிய பூச்செடிகள், அந்த மலைப் பிரதேசத்திற்கேயுரிய மரங்கள் செடிகள், சிறு தோட்டங்கள் என அங்கு செலவிடும் ஒவ்வொரு நொடியும் இயற்கை எழில் கொஞ்சும் வகையில் வடிவமைத்திருக்கின்றனர்.

ஒரு அசல் ஓமானி மலைக் கிராமத்தின் அரவணைப்பை அங்கு துளித் துளியாய் ரசித்து, ருசித்து மகிழ்ந்திடலாம். அங்கு நான் பருகிய லெமன் க்ராஸ் மூலிகைத் தேனீர் இன்று வரை எனது நாவின் சுவையரும்புகளை விட்டு அகலவில்லை. அந்த வாழ்நாளுக்கான அனுபவத்தை நீங்களும் உய்த்துணர வேண்டும் என்ற ஆசையில் தான் உங்களை அங்கு அழைத்துச் செல்கிறேன். அந்த ஊருக்குச் செல்லும் மலைப் பாதையே உங்களுக்கு ஒரு பெரும் சாகச உணர்வைத் தரும்.

ஓமானில் ஆஃப் ரோடு ட்ரைவ் செல்வது அவசியம் தவற விட்டுவிடக் கூடாத அனுபவங்களில் ஒன்று. அந்த விடுதியை அடைந்து ஓமானிகளின் விருந்தோம்பலையும், அவர்களது கிராமத்தின் எழிலையும், அந்த அசாதாரணமான மலையின் விளிம்பில் தங்கும் தனித்துவமான அனுபவத்தையும் அணு அணுவாக ரசித்துக் கொண்டிருங்கள்.

நான் உங்களை அடுத்த விண்மீன் உதிக்கும் போது ஜபல் அக்தர் போர் குறித்த விவரங்களோடு சந்திக்கிறேன்.



# இல்லறம்

-தமிழ்க்காதலன்



**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது**

உலக மனித வாழ்வியல் வரலாற்றில் பல கூறுகளை ஆய்வு செய்யும்போது, வாழும் கலையாக மானுடம் கைக்கொண்ட வழிமுறைகளில் காதல், அழகு, கவர்ச்சி, உணர்ச்சி, காமம் என்று தொடங்கித் தொடரும் இல்லறத்தின் அழகியல் பேசும் முயற்சியின் முன்னெடுப்பு இதோ....!!


தான்பட்ட அனுபவத்தில் இருந்து பண்பட்ட மானுடம், இனப்பெருக்க காரணம் கடந்து, தேடல் தொடங்கிய காலம் தொட்டு, ஆண் பெண் மீதான ஈர்ப்பில் திளைக்கத் தொடங்கி, ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தொடர்ந்து ஈர்த்து ஈர்த்து நெருக்கம் காட்டத் தொடங்கிய காலம்தான் அநேகமாக காதல் பிறந்த காலமாக இருக்க வேண்டும்.

காதல்தான் மானுடம் கொண்ட முதல் அழகியல் உணர்வு. அது மேலிட மேலிட ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவு பிறக்கிறது. உறவு பிறந்த பின் ஒருவர் மீது ஒருவருக்கு உரிமை பிறக்கிறது. உறவும், உரிமையும் வாழ்க்கையை பொறுப்புமிக்கதாக மாற்றுகின்றன. பொறுப்பு என்பதன் முதல் படி பாதுகாப்பு உணர்வாக வெளிப்படுகிறது. பொறுப்பும், பாதுகாப்பு உணர்வும் மனிதனை சமூகமாக வாழ வழிக்காட்டுகின்றன.

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை**

சமூகம் என்ற அமைப்பின் முதல் அடிப்படை அலகாக குடும்பம் இருக்கிறது. குடும்பத்தின் அடிப்படை அலகாக குழந்தைகள் இருக்கிறார்கள். ஆணும், பெண்ணும் நிலைத்த அன்பில், நீடித்த உறவைத் தொடரும் போது, உயிரின் தொடர் நீட்சியாய் குழந்தைகள் பிறக்க, குடும்பம் என்ற சமூக அலகு உருவாகிறது. நிலைத்த வாழ்வுக்கான முதல்படியை மனிதன் கண்டது குடும்பம் என்ற அலகில் இருந்துதான்.

ஆசைகள், அத்துமீறல்கள், கைப்பற்றிக்கொள்ளுதல் போன்ற பேராசைகளின் வெறிச்செயல்கள் மானிடத்தை போராடத் தூண்டியது. உரிமை மீறல்களின் மீதான போராட்டங்களும், பாதுகாத்துக்கொள்ள தொடர்ந்த போராட்டங்களும், மனிதனை மனிதத்தன்மையை இழக்க செய்தன. பெண்ணில் அல்லது ஆணில் தொடங்கி பொருள்கள் மீதான ஆதிக்க குணம் அதிகரிக்க அதிகரிக்க, சமூகம் பிளவுப்பட தொடங்கி, வாழும் இடங்களை மாற்றி மாற்றி, இனக்குழுக்களாக பிரிந்து, செயல்படத் தொடங்கிய காலம் தொட்டு....!, மாந்த இனத்தில் எம் தமிழினம் எவ்வகையில் வாழ்ந்து, உயர்ந்து, சிறந்து நிற்கிறது என்பதை காண்போம் வாருங்கள்.



**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை**

உலகில் தான்தோன்றித்தனமாக சுற்றிக்கொண்டிருந்த மானுடத்தில், தான் தோன்றிய நிலத்தையும், தோன்றிய காலத்தையும், வாழ்ந்த களத்தினையும்,செய்த தொழிலையும், தொழிலுக்கு உதவிய கருவியையும், உயிர்களையும் உருப்பொருளாக்கி, வாழ்வின் கருப்பொருளை வகையாய் வகைப்படுத்திய உலகின் ஒரே மாந்த இனம் தமிழினம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என மனித வாழ்வியலில் வளர்ந்து பண்பட்ட இனமாக வாழும் கலைக்கு இலக்கணம், இலக்கியம் என சான்று பகன்று நிற்கும் இனம் எம் தமிழினம். மற்ற இனங்களில் நம்மிடம் இருக்கும் பண்புகள், பழக்கவழக்கங்கள் சில பொதுவாக காணப்படினும், செம்மைப்படுத்தியும், செழுமைப்படுத்தியும், தொடர்ந்து இயற்கையை கற்று, அனுபவத்தை அடுத்தடுத்த தலைமுறைக்கு கடத்துதலின் மூலம், இயல்பான மொழியும், இயல்பான குணமும், இயற்கையோடு இணைந்த வாழ்வும் தமிழருக்கே உரிய உயர்ந்த பண்புகளாயின காண்க.

"யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்", "யாதும் ஊரே யாவரும் கேளீர்", "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்", "ஒன்றே குலம், ஒருவனே தேவன்", "வாடிய பயிரை கண்டபோதெல்லாம் நானும் வாடினேன்", போன்ற சொற்றொடர்கள் இவ்வுலகின் வேறு எந்த இனத்திலும் பேசப்படாத மொழிகளாக உள்ளதை பார்க்கும் போது, தமிழினத்தின் தனித்தன்மை "உள்ளங்கை நெல்லிக்கனி" என விளங்கும்.

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து**

தன்னுயிர் போல் பிற உயிரையும் எண்ணல் வேண்டும், தன் துன்பம் போல் பிறர் துன்பம் கருதுதல் வேண்டும் என்று ஆகச்சிறந்த படிப்பினை பண்பாடாக்கி, அதையே பாடமாக்கி தன் வழித்தோன்றல்களுக்கு தந்த ஒப்புயர்வற்ற இனமாக தமிழினம் விளங்க, அதன் அடிப்படை அலகாக இல்லறம் என்ற நல்லறத்தை பேணி பாதுகாக்கும் குடும்பமே விளங்குகிறது.

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை**

உலகில் அழிந்துபட்ட பல மானிட இனத்தில், அழிவில்லாத இனமாக தொடர்ந்துக் கொண்டிருக்கும் இனமாக தமிழினம் இருக்க காரணம், அதன் சமூக அமைப்புதான். வழிவழியாய் வாழ்ந்து, வகைதொகையாய் வகுத்துக்கொண்ட வாழ்வியல் பாடங்களை மரபுகளாக்கி, மரபுகளை பல தலைமுறைகளுக்கு கடத்திக் கடத்தி, காலம் கடந்து நிற்கும் உண்மைகளை உணர்ந்து தெளிந்து, அதை நூலாக்கி, அதையே தம்பிள்ளைக்கு அறிவுப்பாலாக்கி, இனம் வளர ஏணிப்படியாய் வாழ்ந்த நம் முன்னோர் வாழிய..!! வாழியவே...!!

மனிதனாய் இருந்தவன் காதலுற்றதும் தலைவன் ஆகிறான், அவளோ தலைவி ஆகிறாள், இந்த தலைவன் – தலைவி என்ற சொற்களே அவர்களின் பொறுப்பை வெளிப்படுத்தும் கருவிகளாகின்றன. இல்லறத்தின் மீதான பொறுப்பும், கடமையும் கைக்கொள்ளும் அதே சமயம், சமூகப் பொறுப்பும், கடமையும் உடன் வந்து தானாக ஒட்டிக்கொள்கின்றன. அதை ஒட்ட வைக்கும் வேலையை உறவுகள் செய்கின்றன. அதைப் பற்ற வைக்கும் வேலையை பாட்டன் – பாட்டி செய்கிறார்கள். தான் வளர்ந்து, பின் தான் பெற்றதையும் வளர்த்து, உணவூட்டும்போதே அறிவையும் ஊட்டி வளர்க்கும் அற்புதம் நிகழ்த்தும் இனமாக மானுடம் இருக்க, அதில் தமிழினம் சிறந்து விளங்குகிறது.

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று**

"ஒருவனுக்கு ஒருத்தி" என்ற உயர்ந்த பண்பினை ஓங்கி ஒலிக்கும் சொல்லே "தலைவன் – தலைவி" என்பது. சங்ககால இலக்கியத்தில் கணவன் – மனைவி என்ற காரணப் பெயர்கள் காணக்கிடைப்பதில்லை. காலவெள்ளத்தில் இடப்பெயர்வுகளை அடைந்தாலும், தமிழினம் காதல் வெள்ளத்தில் மூழ்கியே கிடந்திருக்கிறது. தன் குணத்தை இனத்தின் வேர்களாக்கி, இறுகப்பற்றி இம்மண்ணில் ஊன்றி நின்றிருக்கிறது. இன்றுவரை நிலைத்திருக்கிறது. பாடிய பண்ணிலும், படைத்த இலக்கியத்திலும் அதனை சான்றளித்திருக்கிறது. நடன நளினத்தில் அதன் அசைவை வெளிப்படுத்தி இருக்கிறது.

குமரிக்கண்டம் தொட்டே குமரியோடு கூடிக்குலாவி கொஞ்சி மகிழ்ந்து, நெஞ்சம் நெகிழ்ந்த எம்முன்னோர் கண்டு காட்டியது காதல்வழி மணம். பிற்காலத்தில் பிண்ணிப்பிணைந்த பிற்சேர்க்கையே இக்கால திருமணம். ஆடலும், பாடலும், கூடலும், ஊடலும் இல்லறத்தின் இன்பங்கள் ஆகின. வாழ்வியல் தேடலும், பொருள் நாடலும் சமூக கடமையாகி கைக்கொள்ளப்பட்டன. வாழ்வை செம்மையாக்கவும், முழுமையாக்கவும் அரும்பாடுபட்ட இனம், பெரும்பாடுபட்ட வரலாற்றை கட்டுரைக்கிறேன் கேள் தமிழினமே...!!

**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை**

உலகில் தான்தோன்றித்தனமாக சுற்றிக்கொண்டிருந்த மானுடத்தில், தான் தோன்றிய நிலத்தையும், தோன்றிய காலத்தையும், வாழ்ந்த களத்தினையும்,செய்த தொழிலையும், தொழிலுக்கு உதவிய கருவியையும், உயிர்களையும் உருப்பொருளாக்கி, வாழ்வின் கருப்பொருளை வகையாய் வகைப்படுத்திய உலகின் ஒரே மாந்த இனம் தமிழினம்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என மனித வாழ்வியலில் வளர்ந்து பண்பட்ட இனமாக வாழும் கலைக்கு இலக்கணம், இலக்கியம் என சான்று பகன்று நிற்கும் இனம் எம் தமிழினம். மற்ற இனங்களில் நம்மிடம் இருக்கும் பண்புகள், பழக்கவழக்கங்கள் சில பொதுவாக காணப்படினும், செம்மைப்படுத்தியும், செழுமைப்படுத்தியும், தொடர்ந்து இயற்கையை கற்று, அனுபவத்தை அடுத்தடுத்த தலைமுறைக்கு கடத்துதலின் மூலம், இயல்பான மொழியும், இயல்பான குணமும், இயற்கையோடு இணைந்த வாழ்வும் தமிழருக்கே உரிய உயர்ந்த பண்புகளாயின காண்க.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்", "யாதும் ஊரே யாவரும் கேளீர்", "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்", "ஒன்றே குலம், ஒருவனே தேவன்", "வாடிய பயிரை கண்டபோதெல்லாம் நானும் வாடினேன்", போன்ற சொற்றொடர்கள் இவ்வுலகின் வேறு எந்த இனத்திலும் பேசப்படாத மொழிகளாக உள்ளதை பார்க்கும் போது, தமிழினத்தின் தனித்தன்மை "உள்ளங்கை நெல்லிக்கனி" என விளங்கும்.

**ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து**

தன்னுயிர் போல் பிற உயிரையும் எண்ணல் வேண்டும், தன் துன்பம் போல் பிறர் துன்பம் கருதுதல் வேண்டும் என்று ஆகச்சிறந்த படிப்பினை பண்பாடாக்கி, அதையே பாடமாக்கி தன் வழித்தோன்றல்களுக்கு தந்த ஒப்புயர்வற்ற இனமாக தமிழினம் விளங்க, அதன் அடிப்படை அலகாக இல்லறம் என்ற நல்லறத்தை பேணி பாதுகாக்கும் குடும்பமே விளங்குகிறது.



**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றின் நின்ற துணை**

உலகில் அழிந்துபட்ட பல மானிட இனத்தில், அழிவில்லாத இனமாக தொடர்ந்துக் கொண்டிருக்கும் இனமாக தமிழினம் இருக்க காரணம், அதன் சமூக அமைப்புதான். வழிவழியாய் வாழ்ந்து, வகைதொகையாய் வகுத்துக்கொண்ட வாழ்வியல் பாடங்களை மரபுகளாக்கி, மரபுகளை பல தலைமுறைகளுக்கு கடத்திக் கடத்தி, காலம் கடந்து நிற்கும் உண்மைகளை உணர்ந்து தெளிந்து, அதை நூலாக்கி, அதையே தம்பிள்ளைக்கு அறிவுப்பாலாக்கி, இனம் வளர ஏணிப்படியாய் வாழ்ந்த நம் முன்னோர் வாழிய...!! வாழியவே...!!

மனிதனாய் இருந்தவன் காதலுற்றதும் தலைவன் ஆகிறான், அவளோ தலைவி ஆகிறாள், இந்த தலைவன் – தலைவி என்ற சொற்களே அவர்களின் பொறுப்பை வெளிப்படுத்தும் கருவிகளாகின்றன. இல்லறத்தின் மீதான பொறுப்பும், கடமையும் கைக்கொள்ளும் அதே சமயம், சமூகப் பொறுப்பும், கடமையும் உடன் வந்து தானாக ஒட்டிக்கொள்கின்றன. அதை ஒட்ட வைக்கும் வேலையை உறவுகள் செய்கின்றன. அதைப் பற்ற வைக்கும் வேலையை பாட்டன் – பாட்டி செய்கிறார்கள். தான் வளர்ந்து, பின் தான் பெற்றதையும் வளர்த்து, உணவூட்டும்போதே அறிவையும் ஊட்டி வளர்க்கும் அற்புதம் நிகழ்த்தும் இனமாக மானுடம் இருக்க, அதில் தமிழினம் சிறந்து விளங்குகிறது.

**அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்**
**பிறன்பழிப்பது இல்லாயின் நன்று**

"ஒருவனுக்கு ஒருத்தி" என்ற உயர்ந்த பண்பினை ஓங்கி ஒலிக்கும் சொல்லே "தலைவன் – தலைவி" என்பது. சங்ககால இலக்கியத்தில் கணவன் – மனைவி என்ற காரணப் பெயர்கள் காணக்கிடைப்பதில்லை. காலவெள்ளத்தில் இடப்பெயர்வுகளை அடைந்தாலும், தமிழினம் காதல் வெள்ளத்தில் மூழ்கியே கிடந்திருக்கிறது. தன் குணத்தை இனத்தின் வேர்களாக்கி, இறுகப்பற்றி இம்மண்ணில் ஊன்றி நின்றிருக்கிறது. இன்றுவரை நிலைத்திருக்கிறது. பாடிய பண்ணிலும், படைத்த இலக்கியத்திலும் அதனை சான்றளித்திருக்கிறது. நடன நளினத்தில் அதன் அசைவை வெளிப்படுத்தி இருக்கிறது.

குமரிக்கண்டம் தொட்டே குமரியோடு கூடிக்குலாவி கொஞ்சி மகிழ்ந்து, நெஞ்சம் நெகிழ்ந்த எம்முன்னோர் கண்டு காட்டியது காதல்வழி மணம். பிற்காலத்தில் பிண்ணிப்பிணைந்த பிற்சேர்க்கையே இக்கால திருமணம். ஆடலும், பாடலும், கூடலும், ஊடலும் இல்லறத்தின் இன்பங்கள் ஆகின. வாழ்வியல் தேடலும், பொருள் நாடலும் சமூக கடமையாகி கைக்கொள்ளப்பட்டன. வாழ்வை செம்மையாக்கவும், முழுமையாக்கவும் அரும்பாடுபட்ட இனம், பெரும்பாடுபட்ட வரலாற்றை கட்டுரைக்கிறேன் கேள் தமிழினமே...!!

**அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின் திறந்தெரிந்து தேறப் படும்**

எது சிறந்த வாழ்வு? என்ற கேள்வியை எம்மினம் எப்போதும் கேட்டுக்கொண்டே இருந்திருக்கிறது. ஒன்றுடன் ஒன்றாய் உறவுகளை சேர்க்கும் குடும்பம் என்ற அலகே மனிதனை மனிதனோடு கட்டிவைக்கும் காலப்பாலம் என்பதை உணர்ந்து கண்ட இல்லறம் தான் சிறந்தது என்பதை வாழ்ந்துக்காட்டி, வாழ்ந்துகாட்டி சொல்லிக்கொண்டே வந்திருக்கிறது. தன்னையும் காத்து, தன்னை கொண்டவளையும், கொண்டவனையும் காத்து, தான் பெற்றதைக் காத்து, தான் பெற்றது பெற்றதையும் சேர்த்துக் காத்து, தன்னை நாடியவரையும், வாடியவரையும், வறியவரையும், வழிப்போக்கரையும் காத்து, பெரும்பணி செய்யும் பெருமக்கள் இல்லறம் பேணும் நன்மக்களே..!!

தமிழினத்தின் அச்சாணியாக இருக்கும் இல்லறம், காலவோட்டத்தில் காதல் மணம் கடந்தும், சமூகம் நடத்தி வைக்கும் "சடங்கியல்" என்ற வைபோகத் திருமணங்கள் உருவாகின. பெண் தேடலில் தொடங்கி, திருமணம் வரை, பல மனிதர்களின் தலையீடுகள், குறுக்கீடுகள், வழிகாட்டல்கள் என நீண்ட முயற்சிகளும், பாரம்பரியம், பரம்பரை போன்ற சமூகக் காரணிகளும், சாதி, மதம் என்ற சமூகக் கூறுகளும் இடைமறித்து நிற்கின்றன. தன் குடும்பத் தேவைகள், தொழில் போன்ற கூடுதல் காரணங்களும் கருத்தில் கொள்ளப்படுகிறது. தமிழினத்தில் பெண்ணுக்கு ஈடாக பொன் கொடுத்து, மாப்பிள்ளை வீட்டார் "அச்சாரம்" (அச்சு+ஆரம்) அச்சு – உறுதி, ஆரம் – பொன்னால் ஆன ஆபரணம் கொடுத்து திருமணப் பெண்ணை உறுதி செய்து கொள்வது வழக்கம். தாம்பூலத்தட்டு மாற்றிக் கொள்ளும் பழக்கம் மிகவும் பிற்காலத்தில் வந்தது.

**உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு**


பண்டைய காலத்தில் இயற்கையாய் இயற்கையை ஒட்டி வாழ்ந்த மக்கள் மலர் மாலைகளை மாற்றி அணிந்து இல்லறத்தை ஏற்றார்கள். இக்காலத்தில் பொன்னும், பூணும் அணிந்து இல்லறம் ஏற்கிறார்கள். இடையில் மன்னர்கள் காலத்தில் போட்டியில் வெற்றிப் பெற்று பெண்ணை மணந்துகொள்ளும் முறையும் இருந்து வந்துள்ளது. பிற இனக்கலப்பு ஏற்படாத காலம் வரை, தமிழர்கள் தங்கள் வாழ்வியலில் சடங்கு, சம்பிரதாயம் போன்றவற்றை கைக்கொள்ளவில்லை. மணமக்கள் விருப்பம், அவர்தம் பெற்றோர் சம்மதம் மட்டுமே இலக்கியங்களில் பேசப்படுகிறது. பெண்கள் தங்கள் காதலை வெளிப்படுத்தும் தன்மையும், தலைவனை தேர்வு செய்யும் பழக்கமும் இருந்துள்ளது. அற இலக்கியங்கள், சொல்லாடல்கள், பாடல்கள், கதைகள் மூலம் அறிவுறுத்தல்களும், வலியுறுத்தல்களும் தொடர்ந்து நடந்துக்கொண்டிருந்தன. நீதி நூல்கள் உயிர்த்திருந்தன. ஒருவனுக்கு ஒருத்தி என்பது வாழ்வியலாக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது.

மரவுரி தரித்த காலம்தொட்டு, பட்டாடை உடுத்தும் காலம்வரை பண்பட்டுக்கொண்டே, பாடம் நடத்திக் கொண்டிருக்கிறது தமிழ்ச் சமூகம். எல்லா மனிதரையும், உயிர்களையும் போற்றிப் பாதுக்காக்கும் மிகச்சிறந்த அறம் இதில் இருக்கிறது. உலகில் வாழ்வியலுக்கு இலக்கணம் கண்ட இனமும், வாழ்வின் பொருள் சொன்ன இனமும் இந்த தமிழினம்தான். கருப்பொருளைக் காப்பாற்றி வைத்துக்கொள்ளும் இலக்கியங்களின் வகைகள் வேறாயினும், காலம், வடிவம் வேறாயினும் பொருள் மாறாது தன்னுள் பொதித்து வைத்துக்கொண்ட இரத்தினச்சுரங்கங்கள் அவை.

**பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி வாலெயிறு ஊறிய நீர்**

காதல் கரும்பில் காமம் பிழிந்து வாழ்வை அருந்தும் வழிகண்ட தமிழர் தம் வாழ்வில் பிரிவில்லை; தாழ்வில்லை; உயர்வில்லை; தம் மக்கள் முன்னேற்றம் தவிர வேறில்லை. நிலமும், நீரும் ஆளும் குணமும் கொண்டதால், வானும் மண்ணும் வாழ்வில் தரும் இன்பம் தாமே கண்டனர். அறிவும் ஆய்வும், கோளும் அதன் குறியும், குறிப்பால் கண்டனர். இல்லறமல்லது நல்லறமன்று எனத் தெளிந்து தேடல் நீண்ட தமிழர்தம் வாழ்வியல் இல்லறம் வையத்தை வாழவைக்கும்.

இன்றைய இளம் தலைமுறைகள் இதன் பொருள் புரிந்து, இனம் காத்து, குணம் காத்து, தன்மானம் காத்து, பிரிவில்லா பெருவாழ்வு வாழ்ந்து, தரணி எங்கும் தமிழ் சிறக்க, தமிழர் செழிக்க வழியும், வகையும் கண்டு இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் இம்மண்ணில் நிலைத்து செழித்திருக்க பிரிவில்லாத இல்லறம் கண்டு நல்லறம் காண வேண்டும். தலைமுறைகள் கடந்தும் தமிழும், தமிழர் பண்பும், உயிராய் சுமந்து உயிரில் கலந்து, காலம் கடந்து புவி உள்ளவரை தமிழ் இருக்க, தமிழர் இருக்க வேண்டும். தமிழர் இருக்க அறம் வேண்டும். அந்த அறமும் இல்லறமாய் அமைய வேண்டும். வாழ்க இல்லறம்.



# தடுமாறும் (தடம் மாறும்) இணைகள்

பாலமுருகன்.லோ



நீதிமன்ற வளாகத்தில் கார்த்திக் காத்திருந்தான். அவன் யாருக்காகக் காத்திருக்கிறான் என்றால்... அவனது தாலி கட்டிய மனைவிக்காகத்தான். ஆம், அவன் கீதாவிற்காகத்தான் காத்திருந்தான். இன்று இருவருக்கும் கோர்ட்டிலிருந்து ஆஜராகச் சொல்லி மனு வந்ததின் அடிப்படையில், இருவரும் தனித்தனியாகக் கோர்ட்டுக்கு வந்திருந்தனர்.

ரெண்டு வருடம் முன்னர் இருவரும் எண்ணிப் பார்த்திருப்பார்களா இப்படி கோர்ட் வாசலை மிதிப்போம் என்று. ஆனால், தற்போது இருவரும் கோர்ட்டை நாடியிருக்கின்றனர். ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு விடுதலை வேண்டும் என்ற கோரிக்கையை இருவரும் நீதிமன்றத்தில் வைத்ததன் பேரில், இன்று அவர்கள் இருவரும் ஆறு மாத காலமாக வீட்டிற்கும் கோர்ட்டிற்கும் நடையாய் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

அவரவர் வக்கீல் வந்தவுடன் வளாகத்திலிருந்து நீதிமன்றத்திற்குள் நுழைந்து நீதியரசருக்காக (ஜட்ஜுக்காக) காத்திருந்தனர். வழக்கு கொடுத்தவரிடம் மனுவை ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு சம்மன் எதிர் தரப்பினருக்கு அனுப்பப்படும். அந்த வகையில வழக்கை தொடுத்தவர் கீதா எதிர் தரப்பில் இருப்பவர் கார்த்திக், அதனால் சம்மன் பெற்றவுடன் ஆஜர் ஆகிவிட்டான்.

ஜட்ஜ் வந்தவுடன் அந்த இடமே நிசப்தமானது. கூடியிருந்த அனைவரும் எழுந்து மரியாதை நிமித்தமாக வணக்கம் தெரிவித்ததும், வழக்கு எண் அறிவிக்கப்பட்டது. ஜட்ஜ், எதிர் தரப்பினர் பிரிவில் நின்றிருக்கும் கார்த்திக்கைப் பார்த்து, “மனுதாரர் உங்களிடமிருந்து விவாகரத்து கோருகிறார். உங்களுக்குச் சம்மதமா?” என்றார்.

“ஐயா, நாங்க இருவரும் இப்படி நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை” என்றான்.

“அதுதான் இப்போது நிகழ்ந்துவிட்டதே, என்ன செய்யச் சொல்றீங்க? ஆரம்பத்திலேயே நான் கவுன்சிலிங்கிற்குப் பரிந்துரைத்தேன். கவுன்சிலிங் பிரிவிலும் இருவரும் ஒருவருக்கொருவர் மாறாமல் பிடிவாதமாக இருந்துவிட்டீர்கள். இப்ப என்ன புதிதாகத் தோணுதா?”

கடந்த ஆறு மாத காலமாக இந்த வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. இருவரும் சமரசமாகி விவாகரத்துக்குச் சம்மதித்தால், உடனே இருவருக்கும் விடுதலை கிடைத்துவிடும். இல்லையென்றால், இருவரில் யாரேனும் ஒருவர் இதில் விருப்பம் தெரிவிக்கவில்லையென்றால் இன்னும் குறைந்தது பதினெட்டு மாதங்கள் இந்த வழக்கு நடப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன.

“ரெண்டே ரெண்டு விஷயம்தான். ஒன்று, நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்திடணும், மறுபடியும் உங்க வாழ்க்கையை ஆரம்பிக்கணும். இல்லை, சமரசமாகப் பிரியணும். என்ன சொல்றீங்க கார்த்திக், கீதா?” என்று கேள்வியை எழுப்பினார் ஜட்ஜ்.

மௌனமாக.... இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்,

“கோர்ட் நேரத்தை வீணடிக்காமல் கொஞ்சம் முடிவைச் சொன்னால் நல்லாயிருக்கும்.”

“உங்க கேஸ் மட்டுமல்ல, இங்கே வேறு பல கேஸும் உள்ளது. அதைப் பார்க்கணும்,” என்றார் ஜட்ஜ்.

தீர்மானிக்க முடியாமல் இருவரும் அமைதியாக இருந்ததின் காரணத்தால் ஜட்ஜ் இதைக் கூறினார்.

“நீங்க இருவரும் மீண்டும் ஒரு நல்ல முடிவாக யோசிச்சு வந்து சொல்லுங்க, அதுவரையிலும் நான் இந்த கேஸை வருகிற இருபதாம் தேதிக்கு ஒத்திவைக்கிறேன்,” என்று கூறி அடுத்த நடவடிக்கைகளைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டார்.

இருவரது மௌனத்திற்கும் காரணம், ஒரு வினாடி இருவருமே தங்களது பழைய நினைவுகளில் மூழ்கியதுதான். அதனால் அவர்களால் எதுவும் பேச முடியவில்லை. கீதாவின் மன ஓட்டத்தில், கார்த்திக் பெண் பார்க்க வந்தது நினைவிற்கு வந்து போனது. அதே சமயம் கார்த்திக்கோ, தங்களது திருமண நாட்களையும் அதன் பிறகு அவர்கள் கழித்த நாட்களையும் எண்ணிப் பார்க்க, அந்த நினைவுகள் மனதில் ஊஞ்சல் போல முன்னும் பின்னும் ஆடிக்கொண்டிருந்ததால் அவனாலும் எதுவும் பேச முடியவில்லை.

கார்த்திக்கும் கீதாவும் கோர்ட் வளாகத்திலிருந்து திரும்பித் தங்களது வீட்டிற்கு வந்தனர். கார்த்திக்கின் அம்மா, அப்பா அவனிடம், “ஏன்டா கார்த்திக், என்ன ஆச்சு? ஜட்ஜ் என்ன சொன்னாரு? டேய், அவரு சொல்றது இருக்கட்டும், நாங்க சொல்றத கொஞ்சம் கேளுடா! ஏன்டா பிடிவாதம் பிடிக்கிற? பெண் பார்த்து உடனே பிடித்துப் போய்த்தானே திருமணமெல்லாம் செஞ்சது? இப்ப என்னடா... ரெண்டே வருஷத்துல வேண்டாம்னு முடிவெடுத்திருக்க?”

“அம்மா, சும்மா அதையே சொல்லிட்டு இருக்காத. பெண் பார்த்தப்ப அவளது குணாதிசயங்களெல்லாம் தெரிஞ்சுக்க முடியுமா சொல்லு? இல்லை. பிறகு எப்படி அவளைப் புரிஞ்சுக்கிறது? பார்த்தவுடனே பிடிச்சிருச்சு, சரின்னு சொல்லிட்டேன்.”

ஒருவேளை அவள் இப்படித்தான் யோசித்து இருப்பாளோ என்னவோ! யார் கண்டா! நெருங்க நெருங்கப் பழகத்தான் எங்களிடம் இருக்கும் நிறை குறைகளெல்லாம் இருவருக்கும் தெரிய வருகிறது.

“ஏன்டா, சரி சொல்லு, அப்படி என்னத்த குறைய அவளிடம் நீ பார்த்த?”

“அம்மா... எல்லாத்தையும் உன்னிடத்தில் சொல்ல முடியாதும்மா. புரிஞ்சுக்கோ.”

“ஏன்டா, எங்களுக்கு ஏதும் தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டு இருக்கியா? நாங்களும் உன்னோட நடவடிக்கைகளையெல்லாம் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கோம். ஏன்டா, இந்த ரெண்டு வருஷத்துல எத்தனை நாள் வீட்டில் இருந்திருப்ப, ஒரு எட்டு மாசம்?”

அவன் பதில் பேசாமல் இருக்க, “எப்பப் பார்த்தாலும் ஆபீஸ்ல அங்க போகச் சொன்னாங்க, இங்க போகச் சொன்னாங்கன்னு எங்காவது ஊருக்குப் போயிடுவ. அவளும் வேலைக்குப் போயிட்டு வீட்டுக்கு வந்தா, எங்ககிட்ட கொஞ்ச நேரம் பேசிட்டு, உன்னோட அறைக்குப் போயிட்டா அவ்வளவுதான். புறா, கூண்டுக்குள்ள அடைபட்டுக் கிடக்கிற மாதிரிதான் தனிமையில இருக்கா” என்றாள் அம்மாவை ஏறிட்டுப் பார்த்துவிட்டு தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

“ஒரு நாள் அப்படித்தான், ஆபீஸுல இருந்து வந்ததும் எங்களுடன் கொஞ்ச நேரம் பேசிட்டு, காபி குடிச்சிட்டு அவ அறைக்குப் போயிட்டா. சரி, நாங்களும் அவ அசதியா இருப்பா போலன்னு விட்டுட்டோம். பின் நேரம் ஆக ஆகத்தான், 'அவ ஏன் இன்னும் வெளிய வரல'ன்னு எங்களுக்கும் தோணுச்சு. உடனே அவ அறைக்குப் போய்ப் பார்த்தேன். படுக்கையின் குறுக்குவாக்குல ஒரு பக்கம் தலை தொங்கிய நிலையில, மறுபக்கம் கால்கள் தொங்கிய நிலையிலுமா இருந்தா. எனக்குப் பதட்டமாயிடுச்சு. உடனே உள்ள ஓடிப்போய், கீதா... அம்மாடி கீதான்னு கூப்பிட்டேன். ஆனா பதில் இல்லை. மேஜை மேல இருந்த தண்ணியை எடுத்து அவ முகத்துல தெளிச்சேன். அப்பதான் அவ சுயநினைவுக்கே வர்ற மாதிரி இருந்துச்சு. எனக்குக் கொஞ்சம் பதட்டம் குறைஞ்சது. நிஜமா சொல்லு, அடிக்கடி உங்க ஆபீஸ்ல வெளியில போகச் சொல்றாங்களா? எங்களுக்கே அந்த டவுட் இருக்கு, அப்புறம் அவளுக்கு இருக்காதா?”

அவன் பதில் எதுவும் சொல்லவில்லை.

“ஏண்டா, நாங்க பெரியவங்க சொல்றோம், கொஞ்சம் காது கொடுத்து கேளு. உன்னோட நடவடிக்கையில ஒரு மாற்றம் தெரியுது. அதை நீயே சரி செஞ்சுகிட்டினா நல்லது. இல்லன்னா, ரெண்டு பேருக்கும் அது பாதகமாகத்தான் முடியும். ஏன்டா கார்த்திக், உன்னை நம்பி வந்தவடா அவ. அவளை அப்படியே நட்டாத்துல விடுறதுக்கு எப்படிடா மனசு வந்துச்சு?”
“ம்மா.. சும்மா கத்திக்கிட்டே இருக்காத, இப்ப என்ன ஆயிடுச்சு இவ்வளவு சத்தமா கேள்வி கேட்கிற?”

“என்ன ஆகணும்டா! அதான் டைவர்ஸ் வரைக்கும் போயிடுச்சே. ஒண்ணே ஒண்ணு நானும் உன் அப்பாவும் சொல்லிக்க விரும்புறோம். டேய்.. அவரும் ஓர் ஆபீஸ்ல வேலை செய்தவர்தான். தான் உண்டு, தன் வேலை உண்டுண்ணு இருப்பார். உன்ன மாதிரி திரியல”.

“ம்மா.. நீ இப்ப என்ன சொல்ல வர, நான் ஊரு சுத்துறேன்னு சொல்லுறியா?”

“ஆமான்டா, நீ ஊருச் சுத்துறதான். அதுதான் பார்த்தாலே தெரியுதே. மொச புடிக்கிற நாய் மூஞ்சிய பார்த்தா தெரியாது! அது போல உன்னோட நடவடிக்கைகளைப் பார்த்தாலே தெரிஞ்சுக்கலாம்.”

“ஆமாம் என்ன பண்ணச் சொல்லுற? எனக்கு இன்னொரு பெண்ணோட பழக்கம் இருக்கு. இது எப்படி உங்ககிட்ட, அவகிட்ட எல்லாம் சொல்லுறது. அதனால்தான் ஏதும் சொல்லல.”

“ஏன்டா வீணாப்போனவனே, இதெல்லாம் கெட்ட பழக்கமுண்ணு தெரியலையாடா உனக்கு. டேய் விட்டொழியடா இந்த பழக்கத்தை. நல்லா கிளி போல இருக்காளேடா உன்னோட பொண்டாட்டி. அவளுக்குப் போய் துரோகம் செய்யுறியே, இது நியாயமா, அடுக்குமா!”


“ம்மா.. எனக்கு அவளுக்கும் தான் ஒத்துவரலண்ணு முடிவாகிடுச்சு, பிறகு எப்படி ஒண்ணா வாழச் சொல்லுற.”

“அடேய், யாரு வீட்ல மனக்கசப்பு இல்லாம இருக்கு சொல்லு, எல்லோரும் உன்னை மாதிரியா ஊரு மேயிறாங்களா?”

“அம்மா, கவனமாப் பேசு. அம்மாவாச்சேன்னு பொறுத்து போயிட்டு இருக்கேன். என் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு.”

“அடேய் என்னடா பண்ணுவ, அடிப்பியா? அடிடா, அது ஒண்ணுதான் இந்த வீட்டில நடக்கல. மத்த எல்லாத்தையும் தான் நீ செஞ்சுட்டயே. ஏண்டா, யாரு சொன்னா எங்களுக்கு தெரியாதுண்ணு! கீதாவுக்கு எப்பவோ தெரிஞ்சுப்போச்சு உன்னோட பித்தலாட்ட வேலையெல்லாம். முதல்ல அவ என்கிட்ட வந்துதான் அழுதா. நான் கூட முதல்ல நம்பல, கார்த்தி அப்படிச் செய்யமாட்டான் என்றுதான் சொன்னேன்.”

தெரியும் என்றதும் அவனது கண்கள் நிலம் பார்த்தன.



“அதுக்கப்புறம் தான் மெல்லமெல்ல உன்னோட நடவடிக்கைய கவனிக்க ஆரம்பிச்சேன். உனக்குன்னு ஒரு குழந்தை இருக்கிறப்ப எப்படிடா உனக்கு மனசு வந்தது? யாரோ ஒருத்தியோட குடும்பம் நடத்துற. கீதாவையும் உன்னோட கைக்குழந்தையையும் நினைச்சுப் பார்த்தியா? அவ, பாவம்டா. அந்தப் பாவமெல்லாம் சும்மா விடாதுடா. ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்’னு கேள்விப்பட்டிருப்பியே. அவ்வளவுதான் வாழ்க்கை. போயும் போயும் படுகுழியில் விழப் போறயே. விட்டுட்டு கீதாவோட குடும்பத்தை நடத்தப் பாருடா.”

"ம்மா, எனக்குத் தெரியும் என்ன செய்யணும்னு. நீ போய் படு, இப்ப சும்மா புலம்பாம," என்றான் கார்த்திக்.

இவனை எப்படித் திருத்துவது? கீதாவும் இப்போது வீட்டில் இல்லை, அவளுடைய அம்மா வீட்டுக்குப் போய்விட்டாள். இவன் இப்படிப் பிடிவாதமாக இருக்கிறானே! கடவுள்தான் அனுக்கிரகித்து, இவனுக்கு நல்ல வழியைக் காட்ட வேண்டும் பெருமாளே! என வேண்டிக் கொண்டாள் கார்த்திக்கின் அம்மா.

கீதா தனது குழந்தையுடன் பெற்றோருடன் இருந்து வருகிறாள். தற்சமயம் இருவரும் கார்த்திக் வீட்டில் ஒண்ணா இல்லை, கேஸ் நடப்பதால். ஆனால், வாரம் ஒரு தடவை மாமனார் வீட்டுக்கு தன் குழந்தையுடன் வந்து பார்த்துவிட்டுப் போவாள், அதுவும் கார்த்திக் வீட்டில் இல்லாத சமயம் பார்த்துத்தான் வருவாள்.
ஒரு நாள் கீதாவுடைய மாமியார், அதாவது கார்த்திக்கின் அம்மா, அவளிடம் கேட்டார்.
“ஏம்மா, ஏதாவது பரிசீலிக்க முடியுமா?”


“எதைப் பற்றி அத்தை?” என்றாள் கீதா.

“அதான்மா, உங்க இருவரது வாழ்க்கைப் பற்றித்தான்.”

"எப்படி அத்தை மீண்டும் பரிசீலிக்கிறது? கொஞ்சமாவது மனசாட்சி இருந்தா அவர் இந்தச் செயலைச் செய்வாரா? எவ்வளவு பிடிவாதமா விவாகரத்துக்குப் போயிருக்கார். அவர் என்ன விவாகரத்து கேட்குறது? தப்பு செஞ்சதே அவர்தான், அப்படி இருக்கறப்போ அவர் எப்படி விவாகரத்து கேட்கலாம்? அதான் நானே கோர்ட்ல விவாகரத்து வேணும்னு கேட்டேன். என்னை விடுங்க, ஏதோ கருத்து வேறுபாடு இருக்கிறதால ஒழுங்காப் பேசலை. ஆனா, எங்க குழந்தை என்ன செஞ்சது? அதோட முகத்தைப் பார்த்தாலாவது அவருக்கு வேற நினைப்பு எப்படி வருது சொல்லுங்க?"

சரிதான்மா... நீ சொல்றது சரிதான். அவன்தான் புத்தி பேதலிச்சுப் போயி இப்படி நடந்துக்கிறான்.”

“இல்லை அத்தை. அவர் தான் என்ன பண்றோம்னு நல்லா தெரிஞ்சுதான் செய்றாரு.”



“
“ஏம்மா அப்ப உறுதியாதான் இருக்கியா? எப்படி குழந்தைய வச்சுக்கிட்டு சமாளிப்ப?”


“நீங்க அதைப்பத்தி கவலைப்படாதீங்க. அதான் என் தலையில் எழுதியிருக்குன்னா, யாரால என்ன பண்ண முடியும்? சமாளிச்சுத்தான் ஆகணும்.”

“அம்மாடி, நான் ஒண்ணு உங்கிட்ட தெரிவிச்சுக்கிறேன், அவன் உன்னை விவாகரத்து செய்துட்டான்னா, பிறகு அவனுக்கு இந்த வீட்டுல இடமில்ல. நிஜமாத்தான் சொல்றேன்.”

“அப்படியெல்லாம் சொல்லாதீங்க. ஏதோ நீங்க ரெண்டு பேரும் இருக்கிறதால கொஞ்சம் அடக்க ஒடுக்கமா வாழுறாரு. நீங்களும் தண்ணி தெளிச்சு விட்டுட்டீங்கன்னா, பிறகு அவரோட கதி அதோகதிதான். நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க, இப்ப வந்து பார்க்கிற மாதிரி, என் கடைசி காலம் வரைக்கும் நான் வந்து என் குழந்தையோட உங்க ரெண்டு பேரையும் பார்த்துட்டுப் போறேன்.”

“சரிமா, கடவுள் உன்னை நல்லா வச்சிருப்பார். நீயும் மனசைப் போட்டு உடைக்காம ஸ்திரமா முடிவெடு. நாங்க உன் பக்கம்தான். புரியுதுல்ல? எந்த முடிவா இருந்தாலும் நாங்க உன் பக்கம்தான். என் மகன்தான் தறுதலையா போயிட்டான். எங்களுக்கு ஒரு மகள் இருக்கான்னு நினைச்சுக்கிறோம். நீ விரும்பினா உன் மறுவாழ்வு பத்தி சிந்திச்சுப் பாரு, நாங்க உன் பக்கம்தான்,” என்றாள் கார்த்திக்கின் அம்மா.
கீதாவின் கண்களிலிருந்து கண்ணீர் பீறிட்டுக்கொண்டு வழிந்தது, மனதளவில் மற்றுமொரு அம்மா, அப்பா கிடைத்ததில்.

# கறுப்பி




'கறுப்பி'யை முதலில் சிறுகதையாகத்தான் வாசித்தேன். அப்பொழுதே இது ஒரு நாவலாக வந்தால் நன்றாக இருக்கும் என்று எழுத்தளரிடம் வேண்டுகோள் வைத்தேன். அது நாவலாகி கலக்கல் ட்ரீம்ஸ் இணையத்தில் தொடராக வந்தது. இது நடந்து நான்காண்டுகளுக்குப் பிறகு நடந்து முடிந்த சென்னைப் புத்தகத் திருவிழாவில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. அதற்கு என்னுடைய முதற்கண் நன்றி எழுத்தாளருக்கும், பதிப்பகத்தார்க்கும்..!

எழுத்தாளர் பரிவை சே குமார் அவர்களின் நூல்களை தொடர்ந்து வாசிப்பவர்களுக்கு இந்நாவல் ரொம்பவே வித்தியாசமாக இருக்கும். வழக்கமான கிராமத்துக் களத்தை விட்டு... இந்நாவலில் அயலக களத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

**-ராஜாராம், அபுதாபி**
**(பாரதி நகர், முகவை)**

ஆம்! வெளிநாடு வாழ் பெண்களின் பணிச்சூழல், அங்கு அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைத் தோலுரித்துக் காட்டியிருக்கிறார்.

இந்தக் கறுப்பியில் சிவா சந்தித்த பெண்கள், அவருடைய நண்பர்கள் வட்டத்தில் உள்ளவர்கள் பெண்களிடம் நடந்துகொண்ட விதம் என ஒவ்வொன்றாக நமக்கு சொல்லிக் கொண்டே வருகிறார்.

இந்நாவலில் யமுனா, லீமா, மலாமா(கறுப்பி) முக்கியமான கதாபாத்திரங்கள், லீமாவுக்கும், சிவாவுக்கும் இருக்கும் நட்பின் புரிதல், மலாமா சிவாவிடம் கண் கலங்குதல், யமுனாவின் பாலியல் தொழில் வாழ்க்கை என கதை மூன்று களத்தில் நகர்கிறது.

ஆண் எங்கெல்லாம் பெண்களை ஒரு சதைப் பிண்டமாக மட்டுமே பார்க்கிறான். என்பதை நாவலில் - அவசியம் கருதி - துகிலுரித்திருக்கிறார். கறுப்பின பெண்கள் வைத்து நடத்தும் உட்கா - ஒரு விதமான புகைப்பிடித்தல் - கடைகளில் ஆண்களின் இச்சையைப் போக்க, தன்மானம் இழந்து அவர்களின் வாழ்வாதாரத்திற்காகச் செய்யும் திரைமறைவு வேலைகள், அதில் வரம்பு மீறும் ஆண்கள், அதனால் கண்ணீர் வடிக்கும் கறுப்பி என விவரித்திருக்கிறார்.

இது போக இங்கே குடும்பத்தோடு இருக்கும் ஆண் மகன்களும் இது போன்ற இச்சை விளையாட்டில் இறங்குவதுதான் படு கேவலம், ஒரு இடத்தில் மலாமா சிவாவிடம் "இவனுக இவங்க வீட்டு பெண்களிடமும் இப்படித்தான் நடந்து கொள்வார்களா?" என்று கேட்டு கண் கலங்கும் இடங்கள் வருத்தமும், கோபமும் வருகிறது.

யமுனாவை (தமிழ் பொண்ணு போல) தினமும் சந்திக்கும், சிவாவிடம் தன் துயரங்களை சொல்வது மூலம், ஆறுதலடைகிறாள். சிவாவின் இடமாற்றத்திற்கு பிறகு யமுனாவின் தொடர்பு இல்லாமல் போனாலும் ஒரு குறிப்பிட்ட ஆண்டு இடைவெளிக்குப் பிறகு யமுனாவைச் சந்திக்கிறான், அப்பொழுது யமுனாவின் முகத்தில் பழைய சோகம் இல்லாமல் சந்தோசமும், உடல் வண்ணமும் மாறி அடையாளமே தெரியாமல் இருக்கிறாள்.

இருவரும் நலன் விசாரித்துக் கொண்டு 'எப்படி இருக்கிறாய், பார்க்கும்போதே தெரிகிறது, நன்றாகத்தான் இருக்கிறாய்ன்னு நினைக்கிறேன்' என்கிறான் சிவா. அதற்கு யமுனா, இங்க பரவாயில்லை, ஆனால்! களம்தான் மாறி உள்ளது, போர் கிட்டதட்ட அப்படியேதான் இருக்கிறது என்பதை வேறுவிதமாக சொல்கிறாள், அதை நாவலில் வாசித்துக் கடக்கும்போது கவலை நம்மை தொற்றிக் கொள்கிறது, அதுதான் நிலவும் உண்மையும் கூட..

இதில் மிக சுவாரசியமான பாத்திரம் லீமா. இந்த நாவலில், எனக்கு மிகவும் பிடித்த பெண்ணும் அவள்தான். சிவாவின் அலுவலக தோழி, சிவாவிடம் மட்டும் நட்பாய் மிகவும் நெருங்கிப் பழகுபவர். அவரும், தன் குடும்பத்தை, அதாவது தன் கணவரையும், மூன்று குழந்தைகளையும் பிரிந்து நாட்டைவிட்டு வந்துதான் தன் வாழ்வாதாரத்திற்காக இங்கே பேச்சுலராக இருந்து பணி புரிகிறார்.

**கறுப்பி (நாவல்)**
**கலக்கல் ட்ரீம்ஸ்**
**விலை : ரூ. 130 /-**

மற்றவர்கள் எப்படி? அவர்கள் எந்தவிதமாக பேசுவார்கள், தான் இருக்கும்போது எப்படி பேசுவார்கள், இல்லாவிட்டால் எப்படி பேசுவார்கள் என்பதெல்லாம் தெளிவாக பேசும் பாத்திரம். லீமாவுக்கும் கசப்பான அனுபவம் அலுவலக மேலாளரால் நடக்கிறது, அதை சிவாவிடம் சொல்லி முறையிடுவதும், அதை கடந்து போக வேண்டிய சூழலில் இருப்பது பற்றி ஒரு நல்ல நண்பனாக அவன் எடுத்து கூறும் இடங்கள், மற்றும் அவர்கள் இருவருக்கும் இடையிலான உரையாடல்கள் எல்லாமே மிக அருமையாக இருக்கிறது,

கோடை விடுமுறைக்கு வந்த லீமாவின் கணவரிடம், சிவாவை அறிமுகம் செய்து வைப்பதும், அங்கே நடக்கும் கேலியான கலந்துரையாடல்கள் சிறப்பு. அதேபோல, லீமாவையும், சிவாவையும் அலுவலகத்தில் திரித்து நக்கலாக பேசும் மோசமாமான பகடியும், அதற்கு சிவா எதிர்வினையாற்றி கோபமாவதும் என நாவலின் போக்கில் இயற்கையாகவே அமைந்திருக்கிறது.

நாவலின் கதைக்காக சில இடங்கள், அந்தரங்கமாகவே செல்கிறது. அது சொல்ல வேண்டிய உண்மையும்கூட, அதை வாசிப்பவரின் காதுகளுக்கும், மனசாட்சிக்கு மட்டுமே கேட்கும்..

இதனூடாக ஆங்காங்கே தன் அறைவாசிகளின், அலப்பறைகள், அந்தரங்க தொடர்புகள், வாரயிறுதி நாள்களில் அவர்களது பொழுதுகள் எப்படிச் செல்லும் என்பதை அனைத்தையும் பதிவு செய்திருக்கிறார்.

அருமையான நாவல், என்னுடைய வாசிப்பின் மூலம் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது **வயது வந்தோர் மட்டும் வாசியுங்கள், இருபாலரும்**.
நன்றி.

# ஏமாற்றம்

என்னவென்று
தெரியவில்லை
ஏமாற்றங்கள் மட்டும்
என்னை
எப்பொழுதும்
ஏமாற்றுவதே இல்லை..!

இம்முறை
ஏமாற்றத்தை
திசை திருப்ப
எதிர்மறையை
எதிர்பார்ப்பது
போலிருந்தேன்...

விண்மீன் மின்னிதழ்

அப்பொழுதும்
என்னை
ஏமாற்றாமல்
ஏமாற்றியது
ஏமாற்றம்..!

இப்பொழுது
எது வருகினும்
எதிர் நிற்பேன்
என்ற நிலை
எடுக்க,
பாவம்! என்ன
செய்யப் போகிறது
அது..?

**- கோ.இளங்கோ**

# எம் காதல் ஜெயிக்கும்

பாத்திமா ஹம்தா
மாத்தளை, இலங்கை



அன்றும் வழமைப் போலவே தபாற்காரனின் சைக்கிள் மணியோசை கேட்கிறது. பிரவீனிடமிருந்து லெட்டர் வந்திருக்கும்.

பகலுணவைச் சாப்பிட்டு கொண்டிருந்தவள் அவசரமாக ஓடிப்போய் தபாற்காரனிடமிருந்து கடிதத்தை கையில் வாங்கிக் கொண்டேன் . "பிரியா யாருக்கு லெட்டர் வந்திருக்கு...." என்றார் அப்பா. சற்றும் தாமதியாமல் "லலிதாவிடமிருந்து அப்பா..." என்றேன்.

காரணம் லலிதா என் உயிர்தோழி, அவளிடம் இருந்து தான் எனக்கு கடிதம் வாரதா அப்பா நம்பிட்டு இருக்கார். அவள் வேற்றூரில் ஒரு ஆசிரியராக பணிபுரிகிறாள். ஆனால் நானோ காலேஜ் எல்லாம் முடித்துவிட்டு காதல் எனும் மாயைக்குள் சிக்கித் தவிக்கிறேன்.

லலிதா கடிதம் அனுப்பி ஐஞ்சு வருஷமாச்சு. தபாற்காரர் ஒருவிதமாய் புன்னகைத்தார். எனக்கு வெட்கமாய் போச்சு. எனக்கு பிரவீனிடமிருந்து கடந்த மூனு வருஷமாய் லெட்டர் வருவதை அவர் அறிந்தமையே அந்த புன்னகைக்கு காரணம்.

தபாற்காரர் போனதும் அவசரமாய் கேட்டை இழுத்து மூடி விட்டு மாடிப்படிகளில் ஏறியோடினேன்.

"மெதுவா போ பிரியா. விழுந்துட போற" என அம்மா கத்தினாள். இருப்பினும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் பீரவீனின் காதல் கடிதத்தைப் படிக்கும் ஆர்வத்தில் புள்ளிமானாய் துள்ளியோடினேன்.
சாப்பிடவும் மறந்து போனேன்.

'அன்புக் காதலி பிரியாவுக்கு அன்புக்காதலன் எழுதுவது...'

அவன் பெயர் பிரவீன் என்பதை முதல் கடிதத்தில் எழுதியிருந்தான்.
பிரவீன் என் அப்பாவை சந்திக்க வீட்டிற்கு வந்திருந்தான். என் அப்பா ஒய்வுபெற்ற ஓர் இராணுவ அதிகாரி. அவனும் ஒரு இராணுவ வீரன் என்பதை அவன் ஆர்மி சீருடை எடுத்துக்காட்டியது. வேலை விஷயமாகப் பேச வந்திருந்தான்.

பெண்ணழகில் ஆண்கள் விழுவது தான் வழமை, ஆனால் அன்று நிலைமை தலைகீழானது. அவன் இளநீலகண்கள் என்னை கட்டிப்போட்டன. அதிசயமாய் அவன் கண்களை பார்த்தேன். மாடியில் இருந்தவாறு அவனை நான் ரசிப்பதை கண்டுவிட்டானோ என்னவோ பிரவீன் என்னை பார்த்து அவன் தெத்துப்பற்கள் வெளியே தெரியச் சிரித்தான்.

பிரவீன் எங்கள் தூரத்து உறவும் கூட என்பதை என் அப்பாவின் பேச்சிலிருந்து தெரிந்து கொண்டேன். தான் வெளிநாட்டில் நடக்கவிருக்கின்ற போருக்குச் செல்ல இருப்பதாகவும் தனக்கு ஏதாச்சும் நடந்துவிட்டால் தன் தாயைக் கவனித்துக் கொள்ளும்படியும் சொன்னான்.

அவனைக் கண்டமாத்திரத்திலே காதல் கொண்டுவிட்டதால் அவன் போருக்குப் போகிறான் என்ற செய்தி என்னை வதைத்தது. சில மாதங்களுக்கு பின் பிரவீனிடமிருந்து அப்பாக்கு ஒரு லெட்டர் வர அதை படித்தபோதுதான் புரிந்தது அது அவன் எனக்கு அனுப்பிய கடிதம் என்று... அதில் அவன் எனக்காக எழுதிய முதல் கவிதை நினைவில் வந்து போனது.

**'உன் அழகிய புன்னகைக்கு அடிமையானது (என்) தவறா? இல்லை புன்னகைத்த (உன்) இதழ்களின் தவறா?'**

அலமாரி கண்ணாடி பார்க்கிறேன். புன்னகைத்தபடி என்னை நானே ரசிக்கிறேன்.

இவ்வாறு பல கவிதைகளுடன் எம் காதல் பயணம் கடிதம் வழி தொடர்ந்தது. ஆனால் கடந்த ஆறுமாதங்களாக அவன் கடிதம் வரவில்லை. அவன் இரண்டாவது முறையாக வெளிநாட்டிற்கு போய் வந்த பிறகுதான் கடிதம் வருவது முற்றாக நின்றவிட்டது. எத்தனையோ கடிதங்கள் இதுவரை அனுப்பிவிட்டேன். இப்போது ஒரு பதில் கடிதம் அனுப்பி இருக்கிறான்.

ஆவலாய் பிரித்துப் பார்க்கிறேன். அவன் கடிதம் சொன்னவைகளை என்னால் ஜீரணிக்க இயலவில்லை.

அன்பு காதலி பிரியாவுக்கு,

நான் இதுவரை உன்னை விரும்பியது உண்மை, ஆனால் இதற்கு பிறகு உன் நம்பிக்கையை வளர்க்க எனக்குச் சத்தியில்லை. என்னை மன்னித்து மறந்து விடு. காரணம் கேட்காதே. எல்லா காதலும் ஜெயிப்பது இல்லை. நானோ ஒரு இராணுவன்... என் உயிருக்கு உத்தரவாதமில்லை. அப்படியே நான் உன்னை திருமணம் செய்யச் சம்மதித்தாலும் நீ சம்மதிக்க மாட்டாய். வாழ்க்கை சிலசமயம் ஏற்றுக் கொள்ள முடியாத திருப்பங்களைத் தருகின்றபோது அதை ஏற்றுக் கடந்தேதான் ஆகவேண்டும்.

என் நாடிநரம்புகள் இயங்க மறுத்தன. விதையாய் இருந்த என் காதலை விருட்சமாய் மாறவிட்டு வெட்டி வீழ்த்திட சொல்கிறாய். உன்னால் எப்படி இதை எழுத முடிகிறது பிரவீன். மீண்டும் மீண்டும் அதை வாசித்துப் பார்க்கிறேன்.

"பிரியா ... இன்னும் சாப்பிடாம என்ன பண்ணிக்கிட்டு இருக்க" என அம்மா அறை கதவைத் தட்டுகிறாள்.

சிவந்து போயிருந்த என் கண்களைக் கண்ணாடியில் பார்க்கிறேன். அவன் அனுப்பிய அத்தனை கவிதைகளும் என்னைப் பார்த்து நக்கலாய் சிரிப்பதாய் தோன்றுகிறது.

கதவைத் திறந்தேன். அம்மா அறைவாசலில் நிற்கிறாள். எனக்கு அழுகை வருகிறது. அடக்கிக் கொள்கிறேன்.

"உனக்கு யாரு கடிதம் போடுறது?"

"என்னம்மா கேக்குற..." எனத் தடுமாறுகிறேன்.

"இன்றைக்கு லலிதா வந்திச்சு"

என் கையில் இருந்த கடிதத்தை மறைத்துக் கொண்டேன்.

"எப்போம்மா... வந்தாள்..?"

"நீ இன்ன காலையிலே கடைக்குப் போனதுக்கு அப்பறமா..." என்றதும் என்னால் பேசமுடியவில்லை. காரணம் லலிதாவுக்கு நான் வெகுநாட்களாக லெட்டர் போடுவதில்லை என்பதை அவள் சொல்லியிருப்பாள்.

அதற்கு பின் அம்மாவிடம் என்னால் ஒன்றும் மறைக்க முடியவில்லை. நடந்ததை அப்படியே சொன்னேன்.

அம்மாவுக்கும் ஏற்கனவே பிரவீனை தெரியும் என்பதால் என்னவோ அப்பாவிடம் சொல்லி என்னை பெண் பார்க்க வரும்படி சொல்லி விட்டாள்.

எனக்கு கொள்ளை சந்தோஷம். ஆனால் பிரவீன் என்னை ஏன் புறந்தள்ளுகிறான் என்பதை அறிய முடியவில்லை. தான் ஒரு இராணுவன் என்பதை காரணமாய்ச் சொன்னாலும் அதை என்னால் ஏற்க முடியாது.

'என் அப்பா கூட எங்கம்மா சந்தோஷமா வாழவில்லையா'

அப்பா அழைத்தின் பெயரில் இன்று வீட்டுக்கு வருவதாக லெட்டர் போட்டிருந்தான். என்னை நானே அலங்கரித்துக் கொண்டேன்.

"எப்படி இருக்கேன்ம்மா"

"லட்சணமா இருக்க" என்றபடி என்னை உச்சி முகர்ந்தாள் அம்மா.

'கிறீச் ....' என்ற சத்தத்துடன் கேட் திறக்கிறது. உள்ளே ஒரு கறுப்பு கார் நுழைய அப்பா சிரித்தபடி நின்றிருந்தார்.

"அம்மா பிரவீன் வந்துட்டான்" என்கிறேன்.

"கொஞ்சம் பொறு. வீட்டுக்குள்ள வரட்டுமே" என்று அம்மா சிரித்தாள்.

பிரவீனின் தரிசனத்தை ஆவலோடு எதிர்ப்பார்த்து வண்ணம் அந்த கறுப்புகாரை பார்த்தேன். காரிலிருந்து ஒரு வயோதிப பெண்மணி இறங்கினாள்.

அது பிரவீனின் அம்மாவாக இருக்க வேண்டும். "இறங்கு பிரவீன் ..." என்றபடி கார் முன்புறமாகச் சென்று கதவைத் திறந்து விட்டாள் .

அக்காட்சியை கண்ட கணமே தலை சுற்றியது.

காரணம் ஒருகாலை இழந்த நிலையில் ஊன்று கோல் உதவியுடனும் அவன் தன் தாயின் கைதாங்கலாலும் எழுந்து நின்றான்.

அதற்குள்ளே அப்பா "பிரவீன்..." என சத்தமாய் கத்தியபடியே அவனருகே போய்விட்டார்.

வாழ்க்கை தரும் சில எதிர்பாராத திருப்பங்களை ஏற்று கடந்தேயாக வேண்டும். லெட்டரில் மறைமுகமாக இதனைத்தானா குறிப்பிட்டான் என என் மனம் கேட்டது.

என் பிரவீனால் இந்த ஜென்மத்தில் இழந்த காலை திரும்ப பெறமுடியாது.

'எம் காதல் ஜெயிக்குமா இல்லை ஒரு இழப்புக்காகத் தோற்றுபோகுமா?' என்னை நானே கேட்கிறேன்.

உண்மைக்காதல் தோற்பதில்லை.

என்ன கஷ்டமாக இருந்தாலும் என் அழைப்பிற்கு மதிப்பளித்து வீட்டுக்கு வந்திருக்கிறான். அவன் இளநீலவிழிகள் அங்குமிங்குமாக எதை தேடுகின்றன. அவன் முன் தரிசனமானேன். தெத்துப்பற்கள் வெளியே தெரிய அவன் இதழ்கள் சிரிக்கின்றன. நானும் பதிலாய் புன்னகை பூக்கிறேன்.

தன் நாட்டுக்காக தன் உறுப்பொன்றையே இழந்து தியாகம் செய்த தியாகி அவனை பார்த்து சல்யூட் அடிக்கத் தோன்றியது.

இவனை வாழ்க்கை துணையாக ஏற்பது ஒன்றும் என் பெரிய தியாகமல்ல.

"பிரியா... வாழ்க்கை பூரா நீ கஷ்டப்படனும் வேணாம் இந்த சம்மதம்" என்றாள் என் அம்மா.

"நான் பிரவீனைத் தவிர வேறு ஒருத்தனை மனசிலையும் நினைக்க மாட்டேன். நாங்க கல்யாணமான பிறகு இப்படி நடந்திருந்தால் ஏற்றுக் கொள்ளதானே வேணும்..." என்றேன்.

அம்மா மௌனமாக இருந்தாள். அப்பாவோ 'உன் இஷ்டம்' என்று சொல்லிவிட்டார்.








சில வருடங்களுக்கு பிறகு, "அப்பா.. காலத் தூக்கி அடிக்க முடியாட்டி கைகளால போடுங்க" என்றபடி பிரவீனின் கைகளில் பந்தை திணிக்கிறான் என் நான்கு வயது மகன் கவின்.

பிரவீன் செட்டியில் உட்கார்ந்தவாறே பந்தை கவினுக்கு போடுகிறான். "அவன் அம்மா பையன் பிரியா. உன்னபோலவே யோசிக்கிறான். இருக்கிற விஷயத்ததான் பார்க்கிறான். அவன் கண்கள் நிறைவையே பார்க்குது..." என்கிறான் பிரவீன்.

நான் புன்னகைத்தபடி தந்தையும் மகனும் விளையாடுவதை தூரத்திலிருந்து ரசிக்கிறேன்.

இன்னும் என் மனம் அவனை காதலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

கவினின் நீலவிழிகள் ஜொலிக்கின்றன பிரவீனின் கண்கள் போலவே....



# சர்வம் மாயா மற்றும் இத்திரி நேரம்


பரிவை சே.குமார்

**இ**ந்த முறை இரண்டு மலையாளச் சினிமாக்களைப் பற்றிப் பார்க்கலாம்ன்னு தோணுது.

இப்போது எந்த மொழிச் சினிமா என்றாலும் ரத்தம் தெறிக்க, வசனம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மதுவும் கஞ்சாவும் இல்லாத கதைகளை சினிமா சொல்ல விரும்பாத காலகட்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் ரத்த வாசனை இல்லாமல் சில சினிமாக்கள் வரும்போது, அதுவும் நம் மனதைக் கவரும் கதைக்களமாக இருக்கும் போது ரசித்துப் பார்ப்பதில் தப்பில்லைதானே. அப்படித்தான் சமீபத்தில் பார்த்த சில படங்களில் மிகவும் ரசித்த படமாக 'சர்வம் மாயா' மற்றும் 'இத்திரி ராத்திரி'.

**சர்வம் மாயா** – கிடார் இசைக் கலைக் கலைஞராக ஆசைப்படும் புரோகிதர் வீட்டுப் பையனான நிவின் பாலி, காலத்தின் கட்டாயத்தில் புரோகிதம் செய்ய வேண்டிய நிலைக்குப் போக வேண்டிய சூழல். அப்படி ஒருமுறை ஒரு பேயை விரட்டப் போக, அந்தப் பேயோ அவருடன் அவர் வீட்டுக்கே வந்து விடுவதை உணர்கிறார். அதன்பின் அவருக்கும் அந்த அன்பான, அழகான, சுட்டித்தனம் நிறைந்த பெண் பேய்க்கும் – ரியா ஷிபு – ஏற்படும் அழகான நட்பு காட்சியாக விரிகிறது.

நிவின் பாலி எங்கு சென்றாலும் அவருடனே பயணிக்கிறார் ரியா. ஒரு திரைப்படத்துக்கு இசை அமைக்கும் வாய்ப்புக் கிடைப்பதற்கும் ரியாவே காரணமாக இருக்கிறார். அதற்காக மும்பை செல்லும் நிவின் பாலியுடம் பயணிக்கும் ரியா, அங்கே ப்ரீத்தி முகுந்தனுடன் நெருக்கமாகிறார் நிவின். அதனால் ரியா கோபமாகிறார். அதன் பின் அவர்களுக்குள் பிரச்சினை வருவதும், ரியா காதாலைச் சொல்வதும் எனப் பயணிக்கும் கதையின் முடிவு ரொம்பவே உணர்ச்சிகரமாக இருக்கும்.




ரியா ஷிபுவோட குரலும் சுட்டித்தனமான நடிப்பும் இந்தப் படத்துக்கு மிகப்பெரிய பலம். எனக்குப் பிடித்த நிவின் பாலி ரொம்பவே குண்டாகத் தெரிகிறார். நல்ல நடிகர் ஏனோ தன் உடம்பைப் பற்றி யோசிக்கவில்லை. சில இடங்களில் ரியாவுக்கு அண்ணனைப் போலத் தெரிகிறார்.

சர்வம் மாயா மிகச் சிறந்த படம். கண்டிப்பாகப் பார்க்கலாம்.




**இத்திரி நேரம்**- இது நம்ம 96 மாதிரி ஒரு படம். 96-ல் அன்பான நட்பு ஒரு இரவு முழுவதும் ஊரெல்லாம் சுற்றியபடி பேசித் திரிவதைப் போல், இந்தப் படத்தில் எட்டு ஆண்டுகளுக்குப் பின் சந்திக்கும் முன்னாள் காதலியோடு - ஸரீன் ஷிஹாப் - ஒரு இரவு முழுவதையும் கழிக்கிறார் நாயகன் ரோஷன் மேத்யூ.

தனது பிள்ளையின் பிறந்த நாளுக்கு நண்பர்களுக்குப் பார்ட்டி கொடுக்க வீட்டில் மனைவியிடம் அனுமதி பெற்றுச் செல்லும் ரோஷன், தனது முன்னாள் காதலியிடமிருந்து வரும் அழைப்பின் காரணமாக அவளைப் பார்க்கப் போகிறான். எட்டு ஆண்டுகளுக்குப் பின் சந்திக்கும் அவர்கள் சம்பிரதாயமாகப் பேசிக் கொண்டிருக்கும் போதே மழை வர, ஒதுங்க இடம் பார்க்கும் போது ஒரு மதுபானக் கூடத்துக்குள் அழைத்துச் செல்கிறாள்.

ரோஷனுக்கு ஸரீன் மீது இருக்கும் காதல் இன்னும் அப்படியே இருக்கிறது என்பதால் அந்த இரவை அவளுடன் கழிக்க வேண்டிய சூழல் வந்தபோது அதை ஏற்றுக் கொண்டு அவளுடன் பயணிக்கிறான்.

குடிக்கிறார்கள்... வீட்டுக்குப் போகலாம் எனப் போகும் போது தாங்கள் படித்த கல்லூரி, நண்பர்களுடன் பீர் அடித்த இடம் எனக் கடக்கும் போது மீண்டும் குடியைத் தேடிப் போகிறார்கள்.

குடித்து மகிழ்ந்து வீட்டுக்குப் போகலாம் எனும் போது நாயகி தன்னிலை மறக்கும் நிலைக்குப் போகிறாள். ஆட்டோவில் பயணிக்கும் போது அவள் வாந்தி எடுத்து மயங்க பிரச்சினை உருவாகிறது. அவளது வீட்டு முகவரி தெரியாத நிலையில் எங்கு செல்வது..? என நடுரோட்டில் நிற்கும் போது நண்பர்களின் ஞாபகம் வர, அவர்கள் அறை எடுத்திருக்கும் ஹோட்டலுக்குப் போக, அங்கும் பிரச்சினை என்பதால் நண்பரின் காரில் அவளை வைத்துக் கொண்டு இரவெல்லாம் சுற்றி கன்னியாகுமரி வந்து சேர்கிறார்கள்.

அதன்பின் நடப்பது என்ன என்பதுதான் படத்தின் அருமையான முடிவு.

96 காதலை அழகாய் காட்டியது. இத்திரி ராத்திரியோ காதலை அழகாக உணர வைத்தது.

GALAXY BOOK
SELLERS & PUBLISHERS




& Many....

WhatsApp 9994434432